# ශ්‍රී ජයවර්ධනපුර මහාරෝග්‍යශාලාව
# SRI JAYEWARDENEPURA GENERAL HOSPITAL
# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுபத்திரி

## වාර්ෂික වාර්තාව
## ANNUAL REPORT
## ஆண்டறிக்கை

## 2011



# ஆண்டறிக்கை

# 2011

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுப்பத்திரி

தலபத்பிட்டிய,
நுகேகொடை
இலங்கை

# நுழைவாயிலுள்ள நினைவுப் படிகம்

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதியுத்தமராம் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜயவர்தன அவர்களின் ஆக்க முயற்சியின்மீது ஜப்பானுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசிற்கும் இடையிலான நட்புறவினதும் ஒத்துழைப்பினதும் அடையாளமாக ஜப்பான் அரசாங்கத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுப்பத்திரியும் பட்டப்பின் பயிற்சி நிலையமும் 1983”

## குறிக்கோள

உயர்ந்த நெறிமட்டமிக்க, நோயாளருக்கான சிறந்த சேவையை வழங்கும் பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான வசதிகளைக்கொண்ட தேசிய, சர்வதேச சமூகத்திற்கு, அர்ப்பணிப்பும் உந்து சக்தியும் மிக்க பணியாட்களின் உதவியுடன், சேவை புரியும், கட்டணம் அறவிடும் பன்முக அரச வைத்தியசாலையாகவும் ஆற்றுப்படுத்துவதற்கான மூன்றாம் நிலை மையமாகவும் திகழ்தல்.

## நோக்கம்

தேசிய மற்றும் சர்வதேச சமூகத்திற்கு முன்னேற்றமான மருத்துவ சேவையை வழங்கும் அதிதேர்ச்சிமிக்க மையமாக திகழ்தல்

# வரலாற்று நிகழ்வுகள்

ஆசுப்பத்திரி இலங்கையின் அப்போதைய சனாதிபதி அதியுத்தமராம் ஜே.ஆர். ஜயவர்தன அவர்களாலும் ஜப்பான் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய மாண்புமிகு இஷிமட்சூ கிட்டகாவ அவர்களாலும் 1984 செப்தெம்பர் 17ஆம் திகதி சம்பிரதாயப்பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

முதலாவது சபை மகளிர் விவகார, போதனா வைத்தியசாலைகள் அமைச்சர் மாண்புமிக்க திருமதி சுனேத்ரா ரணசிங்க அவர்களால் 1985 பெப்ரவரி 23ஆம் திகதி நியமிக்கப்பட்டது. சபையில் பின்வருவோர் இடம்பெற்றனர். வைத்தியகலாநிதி ஆர்.பீ.ஜே. பீரிஸ் (தவிசாளர்), வைத்தியகலாநிதி டீ.டீ. சமரசிங்க (அமைச்சுப் பிரதிநிதி), திரு. எஸ்.பி. சந்திரதாச (நிதி அமைச்சுப் பிரதிநிதி), திரு. கே.என். சொக்ஸி, (சனாதிபதி வழக்கறிஞர்), திரு. எம்.ரி. பெர்னாண்டோ (பட்டயக் கணக்காளர்), வைத்தியகலாநிதி மாலிங்க பெர்னான்டோ (சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி), வைத்திய கலாநிதி எஸ்.ஏ. கப்ரால் (பணிப்பாளர், ப.பி.ம.நி.) மற்றும் திரு கே.டீ.எல். ரத்னசேன. இவர் சபையின் செயலாளராக இருந்தார். சபையின் முதலாவது கூட்டம் 1985 பெப்ரவரி 28ஆம் திகதி நடைபெற்றது.

முதலாவது சத்திரசிகிச்சை வைத்தியகலாநிதி கே. யோகேஸ்வரனால் (FRCS) 1985 சனவரி 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. (உணர்விழப்பு வைத்தியகலாநிதி கே.ஏ. பெரேராவினால் (FRARCS) வழங்கப்பட்டது).

முதலாவது பிரசவம் வைத்தியகலாநிதி கிங்ஸ்லி டீ சில்வாவின் (FRCOG, FRCSE) பராமரிப்பின்கீழ் 1985 சனவரி 18ஆம் திகதி இடம்பெற்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுப்பத்திரி குணமாக்கும் சுகாதார சேவையை குறைநிரப்புவதற்காகவும் மருத்துவப் பட்டதாரி மாணவர்கள், பட்டப்பின் பட்டதாரிகள், மற்றும் ஏனைய சுகாதார ஆளணியினர் ஆகியோரைப் பயிற்றுவிப்பதற்காகவும் தாபிக்கப்பட்டது. கொள்கை சார்ந்த முடிவுகள் பணிப்பாளர் சபையால் எடுக்கப்படும் அதேவேளை தொழிற்பாடு சார்ந்த கட்டுப்பாடு - அதாவது ஆசுப்பத்திரியின் அன்றாட நிர்வாகத்தின் கட்டுப்பாடு முகாமைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. தொழிற்பாடுகளின் நிதியளிப்பும் மூலதன உபகரணங்களும் பொதுத் திறைசேரியிடமிருந்து மானியமொன்றின் ஊடாகவும் மருத்துவமனையினால் உண்டுபண்ணப்படும் ஈட்டத்தின் ஊடாகவும் பெறப்படுகின்றது.

## கூட்டிணைப்புத் தகவல்

| | |
|---|---|
| ஒழுங்கமைப்பின் பெயர் | : ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆசுப்பத்திரி |
| முகவரி | : தலபத்பிட்டிய, நுகேகொடை, இலங்கை |
| சட்ட வடிவம் | : 1983ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சபை |

## பணிப்பாளர் சபை

- வைத்திய கலாநிதி என்.டப்ளியூ.ஈ விஜேவந்த்த – தவிசாளர் (21.01.2011 – 05.10.2011)
- திரு. எம்.எம்.என்.டீ. பண்டார – தவிசாளர் (12.10.2011 முதல்)
- வைத்தியகலாநிதி டீ. எல். டீ லெனரோல் - மருத்துவமனைப் பணிப்பாளர் - (பதவிவழி) (21.01.2001 வரை)
- வைத்திய கலாநிதி எஸ்.ஏ.கே. கமகே மருத்துவமனைப் பணிப்பாளர் (பதவிவழி (18.02.2011 முதல்)
- வைத்திய கலாநிதி அஜித் மென்டிஸ் - சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி (பதவிவழி)
- பேராசிரியர் ரிஷ்வி ஷெரிவ் - பணிப்பாளர் பட்டப்பின் மருத்துவ நிறுவகம் (பதவிவழி)
- திருமதி ஹிரன்சா குலதந்திரி — திறைசேரிப் பிரதிநிதி (11.04.2011-29.11.2011)
- பேராசிரியர் ஜானக டீ சில்வா – (அமைச்சுப் பிரதிநிதி (17.10.2011 முதல்)
- வைத்திய கலாநிதி பி. ஜீ. மஹிபால (அமைச்சுப் பிரதிநிதி) (16.11.2011 முதல்)
- வைத்திய கலாநிதி டீ. ஜே. விக்ரமரத்ன - ஆலோசகர் பிரதிநிதி (16.11.2011முதல்)
- வைத்தியகலாநிதி டீ. எல. பியசிறி – ஆலோசகர் பிரதி (16.11.2011முதல்)
- வைத்திய கலாநிதி ஹாஷா சமரவீர – (அமைச்சுப் பிரதிநிதி)
- திரு. கிரான் அத்தபத்து – அமைச்சுப் பிரதிநிதி (21.06.2010 முதல – 05.10.2011)
- திரு. மஹிந்த சமரசேகர – அமைச்சுப் பிரதிநிதி (21.06.2010 – 05.10.2011)
- திருமதி திலனி ராஜபக்ஷ (சபைச் செயலாளர்)

## வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

ஹற்றன் நஷனல் வங்கி

ஸ்டேன்டர்ட் சார்ட்டட் கிறின்ட்லேய்ஸ் வங்கி

## முகாமைக்குழு

1. வைத்திய கலாநிதி எஸ்.ஏ.கே. கமகே - பணிப்பாளர்- குழுத் தவிசாளர்
2. வைத்தியகலாநிதி (திருமதி) சீ. ஆரியனந்த - பிரதிப் பணிப்பாளர், உறுப்பினர் - அழைப்பின்பேரில்
3. வைதிய கலாநதி ரோஹான் அலோசியஸ் - ஆலோகர் சிறுவர் மருத்துவர், உறுப்பினர்
4. வைத்திய கலாநிதி பி.ஜே. அம்பவத்த, ஆய்வுகூட மருத்துவ ஆலோசகர், உறுப்பினர்
5. வைத்திய கலாநிதி ஹார்ஷா குணசேகர – நரம்புத்தொகுதி சிகிச்சை ஆலோசா்
6. திரு. டீ. ஏ. பெரேரா – உதவிக் கணக்காளா் - உறுப்பினா்
7. திருமதி தி. ராஜபக்ச – மருத்துவமனைச் செயலாளர் - உறுப்பினர
8. திருமதி. ஏ.என். சப்புதந்திரி பிரதம மருத்துவத்தாய் - உறுப்பினர்

## கணக்காய்வுக்குழு

திரு. ஹரன்சா களுதந்திரி – சபை உறுப்பினர், தவிசாளா
திரு. ஹார்ஷா சமரவீர, சபை உறுப்பினர், உறுப்பினர்
திரு. மஹிந்த சமரசேகர, சபை உறுப்பினர், உறுப்பினர்
திரு. எச்.டீ.எல்.சீ. கருணாரத்ன, உள்ளகக் கணக்காய்வாளர் கூட்ட அமைப்பாளர்

தனித்துவம்பெற்ற பணியாட்டொகுதியினர்

| | | |
|---|---|---|
| உணர்விழப்பு மருத்துவர் | வை.க. (திருமதி) சீ.என். கருணாரத்ன | MBBS MD(Cey) FRCA (Lond) |
| | வை.க. V.K.P. இந்திரரத்ன | MBBS, MD, FFARCSI FRCA |
| | வை.க. (திருமதி) ஜே.எஸ்.கே. ராஜசிங்க | MBBS MD (Anesthesia) FRCA (UK) |
| | வை.க. ஆா.பி.எஸ். பளியவதன | MBBS MD (Anesthesia) FRCA (London |
| இருதய சிகிச்சை மருத்துவர் | வை.க. (செல்வி) N.L. அமரசேன | MBBS MD (Colombo) FRCP (London) |
| இருதய சத்திர சிகிச்சை மருத்துவர் | வை.க. P.A. குணரத்ன | MBBS MS FRCS |
| | வை.க. A.D. கப்புறுகே | MBBS MS |
| செ.நா.தொ. சத்திர சிகிச்சை மருத்துவர் | வை.க. A. ஜயசேன | MBBS, MS, FRCS |
| கண் சத்திர சிகிச்சை மருத்துவர் | வை.க. D.H. வாரியபொல | MBBS DO FRCS (Ed.) MS |
| இரத்த அணு மருத்துவர் | வை.க. (செல்வி) சீ. காரியவசம் | MBBS, Dip Path MD (Hematology) |
| நுண்ணுயிரியலாளர் | வை.க. (செல்வி) எஸ்.கே. ஜயதிலக | MBBS(Col) Dip. Medical Micro, M.D. (Microbiology) |
| | | MBBS, Dip. Path, MD. (Patholocy) |

| | | |
|---|---|---|
| உயிர்த் தசைமங்கள் ஆய்வாளர் | வை.க. பி. ஜே. அம்பவத்த<br>வை.க. சொனாலி ரொட்ரிகோ | MBBS, Dip. Path, MD. (Patholocy)<br>MBBS, Dip. Path, MD. (Patholocy) |
| | வை.க. (திருமதி) எம். ஜோசப் | |
| | வை.க. பி.ஜே. அம்பவத்த | MBBS, D.Path, MD (Pathology) |
| புதுப்பிரசவ சிகிச்சையாளர் | வை.க. (திருமதி) எம். வீரசேகர | MBBS, DCH, MD (Paed.),MRCP(UK) |
| சிறுநீரக மருத்துவர் | ஜவை.க. சீ. ஏ. ஹேரத் | MBBS MD |
| | வை.க. ஹேமந்த பெரேரா | MBBS, MS, (Sri Lanka), FRCOG(U.K.), |
| மகப்பேற்றியல் பெண்ணோயியல் மருத்துவர் | வை.க. எம். கருணாரத்ன | M.B.B.S. Sri Lanka) FRFOG (U.K.) |
| எலும்பு முறிவு சத்திரசிகிச்சை மருத்துவர் | வை.க. ஏ.பீ.எஸ். ஆனந்த பெரேரா | MBBS, MS. FRCS |
| சிறுவர் மருத்துவர் | வை.க. ஆர்.ஏ.ஆர்.டீ. அலோசியஸ் | MBBS, DCH MD MRCL |
| பொது மருத்துவர்கள் | வை.க. (திருமதி ஏ. விஜேசுந்தர<br>வை.க. சீ ஜயசுந்தர | MBBS ,MD(Cey), FRCP(Eng), FCCPDGM (London), FRACP(Hony)<br>MBBS, MD |
| | வை.க. ஆர். எல் சத்தரசிங்க | MBBS,MD,MRCP(Lond) (Glass) MRCP (Ire) FRCP(USA)),CCST(UK) FACP (USA) |
| | வை.க. சிந்தக டீ சில்வா | MBBS. MD, MRCP (UK) |

| | | |
|---|---|---|
| ஊடுகதிரியலாளர் | வை.க. டீ.ஜே. விக்ரமரத்ன | MBBS,(Cey),MD(Radiology) |
| | வை.க. (செல்வி) என்.எம்.பி.கே. அரம்பேபொல | MD (Radiology) |
| பொது அறுவை வைத்தியர்கள் | வை.க. ஜீ. குணதிலக்க | MBBS(Cey),FRCS |
| | வை.க. டீ.எல். பியசிறி | MS,FRCS (Ed) |
| | வை.க. (செல்வி) டீ.எச். சமரக்கோன் | MBBS, MS (Colombo) MRCP (U.K) |
| வாதநோய் மருத்துவர் | வை.க. கே. காசிம் | MBBS,MD |
| நரம்புநோய் மருத்துவர் | வை.க. எச்.எச். குணசேகர | MBBS,MD,MRCP |
| நரம்புநோய் அறுவை மருத்துவர் | வை.க. (செல்வி) எம். விஜேவர்தன | MBBS(Hons,Melb)MS, (S.L.), FRCS(Edin) |
| சருமநோய் மருத்துவர் | வை..க. (திருமதி) டீ. ஆரியவன்ச | MBBS,MD(Dermatology) |

<u>தவிசாளரின் செய்தி</u>

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையின் 2011ஆம் அண்டிற்கான ஆண்டறிக்கையை வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சியும் பெருமையம் அடைகின்றேன்.

2011ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனைக்கு சீரற்ற ஒரு ஆண்டாக அமைந்திருந்தது. இதற்கான முக்கிய காரணம் உண்மை நிலையைப் பாராமல் பாதமான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டமையும் பாதகமான ஊடாக பிரசாரத்தின் காரணமாக மருத்துவ மனையின் அனைத்து பணியாட்டொகுதியனரும் விசேடமாக மருத்துவ ஆலோசகர்களும் ஊக்கமிழந்திருந்தனர்.

2011ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையின் பணிப்பாளர் சபை புதிதாக நியமிக்கப்பட்டது. இந்த சிரமங்களுக்கும் பாதகமான பிரசாரத்திற்கும் மத்தியில் மருத்துவ மனை முகாமைத்துறையால் கடந்த ஆண்டுகளுடன் ஒப்புநோக்குமிடத்து சிறந்த செயற்பாட்டு மட்டங்களைப் பேணக்கூடியயதாக இருந்தது. சுகாதார அமைச்சர் மாண்புமிக்க மைத்திரிபால சிறிசேன அவர்களினதும் சுகாதார அமைச்சின் செயலாளரினதும் அமைச்சின் ஏனைய பணியாட்தொகுதியினதும் முனைப்பாக உற்சாகமூட்டலும் கடந்த ஆண்டில் இந்தத் தடைகளைத் தாண்டிவருவதற்கு உறுதுணை புரிந்தன.

முன்னைய தவிசாளர் திரு. என். டப்ளியூ. ஈ. விஜேவந்த்த அவர்களும் முகாமை சபையின் முன்னைய உறுப்பினர்களும் ஆற்றிய சேவைக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தொடர்ந்து அளிக்கப்பட்ட ஆதரவுக்காக பணிப்பாளர் சபையினருக்கும் மருத்துவ மனைப் பணிப்பாளருக்கும் மருத்துவ மனைச் செயலாளருக்கும் ஏனைய சிரேஷ்ட அலுவலர்களுக்கும் அத்துடன் எமது மருத்துவ ஆலோசகர்கள், தாதிப் பணியாட்டொகுதியினர், துணை மருத்தவர்கள் ஆகியோரின் அணியினருக்கும் அனைத்துப் பணியாட்தொகுதி உறுப்பினர்களுக்கும் நிறுவனத்தின்மட்டில் அவர்களது இடையறாத அர்ப்பணிப்பிற்காகவும் கடப்பாட்டிற்காகவும் விசுவாசத்திற்காகவும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

எம்.எம்.என்.டீ பண்டார
தவிசாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனை

## பணிப்பாளரின் செய்தி

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் 2011ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கான செய்தியை வெளியிடுவதில் நான் பெரிதும் மகிச்சியடைகின்றேன்.

ஒரு சில காரணங்களுக்காக பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், கணக்காளர் ஆகியோர் சேவையில் இல்லாத ஒரு காலக் கட்டத்தில் நான் இந்த மருத்துவ மனையில் பணிப்பாளராக எனது கடமைகளை ஆரம்பித்தேன்.

பணியாட்டொகுதியின் வேதனங்களுக்கும் புதிய உபகரணங்களின் கொள்வனவிற்கும் சுகாதார அமைச்சு நிதியுதவி அளிப்பதனால் கட்டணம் அறவிடும் இந்த மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவ மனையின் பிரதான குறிக்கோள் பொது மக்களுக்கு கட்டுப்படியாகும் விலையில் நோயாளர்களுக்கு தரமான மருத்துவ பராமரிப்பை வழங்குவதாகும். அரசாங்க மற்றும் தனியார் துறை மருத்துவ மனைகளுடன் ஒப்புநோக்குமிடத்து உருப்படி ரீதியிலும் நிதி ரீதியிலுமான செயற்பாடு எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

கடந்த ஒரு தசாப்த காலமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனை கொழும்பிலும் ஏனைய சுற்றுப்புறங்களிலுமுள்ள ஏனைய அரசாங்க மருத்துவ மனைகளுக்கும் தனியார்துறை மருத்துவ மனைகளுக்கும் ஈடாக அபிவிருத்தியடையவில்லை.

அத்துடன் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு வருகைதரும் பொது மக்களை தடைசெய்யும் வகையில் பாதகமான ஊடாக பிரசாரம் மருத்துவ மனையின் முன்னேற்றத்தை பெரிதும் பாதித்துள்ளது.

அதே வேளை மருத்துவ ஆலோசகர்கள், மருத்துவ அலுவலர்கள், தாதிப் பணியாட்டொகுதினர், துணை மருத்துவப் பணியாட்டொகுதியினர் மற்றும் அனைத்து ஊழியர்கள் ஆகியோரால் பாரிய சவால்களுக்கு மத்தியில் கடப்பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் வழங்கப்பட்ட சிறந்த பங்களிப்புடன் புதிய தவிசாளராலும் பணிப்பாளர் சபையினராலும் உயரிய இலக்குகளை எய்தக்கூடியதாக இருந்தது.

2011ஆம் ஆண்டு இந்த மருத்துவ மனையில் 5S எண்ணக்கருத்தை நடைமுறைப்படுத்துவதில் அனைத்துப் பணியாட்டொகுதியினராலும் அவர்களது அணியினாலும் வழங்கப்பட்ட கூட்டு முயற்சிகளையும் பங்களிப்பையும் நான் பாராட்ட வேண்டும்.

அண்மைய வருங்காலத்தில் நிரந்தரக் கணக்காளரினதும் பிரதிப் பணிப்பாளரினதும் நியமனத்துடன் இந்த மருத்துவ மனையால் மேலும் சாதனைகளை அடையமுடியும் என நான் நம்புகின்றேன்.

பொது மக்களுக்கு தரமான நோளாளர் பராமரிப்பை அளிப்பதில் ஏனைய தனியார் துறை மருத்துவ மனைகளுடன் போட்டியிடுவதற்கு மருத்துவ மனையின் சேவைகளை அபிவிருத்தி செய்வதே எமது சவாலாகும்.

வைத்திய கலாநிதி எஸ். ஏ. கே. கமகே

**MBBS (SL), MSc (Med. Adm)**

பணிப்பாளர்,

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனை

## பிரிவுகள் ரீதியில் தொழிற்பாடுகளின் மீளாய்வு

<u>பொது</u>

நோயாளர்களின் கண்ணோட்டத்தில் சேவைகள் இரண்டு பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்படலாம், அதாவது வெளிநோயாளர் பகுதி, உள்ளகநோயாளர் பகுதி என்பதாகும்.

வெளிநோயாளர் பகுதியானது அவசர சிசிச்சைக் கூறையும் வெளிநோயாளர் பரிசீலனைப் பிரிவையும் பிரத்தியேக சந்திப்பின் ஊடாக மருத்துவ ஆலோசனைகளையும் மருத்துவக் கூடங்களையும் கொண்டுள்ளது.

உள்ளகநோயாளர் பகுதியானது பிரதானமாக நோயாளிகளின் கூடங்களையும் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான பிரிவையும் உள்ளடக்கும்.

உருப்படி ரீதியிலான செயற்பாடு பணியின் வெளிப்பாட்டிற்கு பல மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. மிகவும் முக்கியமான ஒரு சில பிரச்சினைகளுள் மருத்துவமனைக் ட்டணங்கள், நோயாளர்களின் நிதி வலிமை, ஆண்டிற்குள் தொற்றக்கூடிய நோய்களின் போக்கு, அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாக வழங்கப்படும் வசதிகள், அவை வழங்கும் வாய்ப்பு முதலியன அடங்கும். பணியாட்டொகுதியின் பற்றாக்குறைக்கு மேலதிகமாக அவ்வப்போது இடம்பெறும் உபகரணங்களின் செயலிழப்பு என்பனவும் மருத்துவமனையின் செயற்பாட்டைப் பாதிக்கின்றன.

இக்காரணங்களினால் முந்திய ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து வெளி நோயாளர் அதிகரிப்பும் அனுமதிப்புகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியும் காணப்படுகின்றது.

2010ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து 2011இல் உள்வரும் நோயாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியுற்றுள்ளது. இது உள்ளகப் பிரச்சிகைளினாலாகும்.

அனுமதிப்புகள்




<u>படுக்கை இருப்பாட்சி</u>




படம் 2

படுக்கை இருப்பாட்சி




கோட்டுப்படத்தில் காட்டப்பட்டவாறு கடந்த ஐந்து ஆண்டுகளுள் 2009ஆம் ஆண்டு ஆகக்கூடுதலான படுக்கை இருப்பாட்சியை எய்துள்ளது. அதே வேளை 2011இல் படுக்கை இருப்பாட்சி 66.8% ஆகும்.

(1) மருத்துவக் கூடங்கள்

| | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 293 | 291 | 288 | 292 | 292 |
| நோயாளர் வருகை | 41545 | 38837 | 38671 | 37408 | 36382 |
| அனுமதிப்புகள் | 16823 | 17229 | 17291 | 17009 | 1986 |
| படுக்கை இருப்பாட்சி | 106% | 113% | 111% | 110% | 116% |

மருத்துவக் கூறுகள்

184 படுக்கைகளையுடைய மூன்று மருத்துவக் கூடங்கள் (6, 12, 17) 2011இல் பொதுவாக நல்ல ஆதரவைப் பெற்றன. சராசரி படுக்கை இருப்பாட்சி 116%. (படுக்கை இருப்பாட்சி – சிகிச்சைக் கூடம் (6) 121.8% சிகிச்சைக் கூடம் (12) – 121.8% , சிகிச்சைக் கூடம் 17 – 107.7%)

மூன்று மருத்துவர்கள் வாரம் இரு முறை பிணி ஆய்வு கூடங்களை நடத்துகின்றனர். ஒவ்வொரு வாரமும் நடாத்தப்படும் பிணி ஆய்வுகளுக்கு மேலதிகமாக தொடர்புடைய பிணி ஆய்வுகளான தொய்வு, நீரிழிவு, மற்றும் மூச்சிக்குழாய் ஆய்வுப் பரிசீலனையும் மருத்துவமனையில் ஒவ்வொரு வாரமும் இடம்பெற்றன.

## 2. சிறுவர் மருத்துவக் கூறு

இக்கூறு 43 டுக்கைகளைக் கொண்டுள்ளதுடன் எந்தவொரு விதமான சிறுவர் மருத்துவ அவசரகால நிலைகைளையும் கையாள்வதற்கு நன்கு சாதன வசிதிகளைகளையும் கொண்டுள்ளது.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 330 | 332 | 336 | 331 | 337 |
| நோயாளர் வருகை | 3537 | 4302 | 4744 | 7835 | 7300 |
| அனுமதிப்புகள் | 2994 | 3230 | 3885 | 3564 | 3284 |
| படுக்கை இருப்பாட்சி | 73% | 75.4% | 71.4% | 67.8% | 70.2% |

வாரந்தோறும் நடைபெறும் சிறுவர் பிணி ஆய்வு சிகிச்சைக் கூடங்களுக்கு மேலதிகமாக தடுப்பூசி பிணி ஆய்வுகூடம், தொய்வு பிணி ஆய்வுகூடம் என்பனவும் மருத்துவ மனையில் ஒவ்வொரு வாரமும் நடைபெறுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து படுக்கை இருப்பாட்சி அதிகரித்துள்ளது.

## 3. புதுப் பிரசவ தீவிர கவனிப்புக் கூறுகள் (பு.பி.தீ.க.கூ.)

ஸ்ரீ ஜயவர்தன பொது ஆசுப்பத்திரியின் பு.பி.தீ.க. கூறு அதனளவில் நாட்டிலுள்ள மிகச் சிறந்த கூறாகும். இது மோசமான குறைப் பிரசவங்களையும் எடை குறைந்த குழந்தைகளையும் கையாள்வதற்கு சிறந்த சாதன வசதிகளைக் கொண்டுள்ளது. மருத்துவமனையின் பொது மகப்பேற்றியல் கூறுகளிலிருந்து

மாத்திரமன்றி ஏனைய அரசாங்க மற்றும் தனியார் மருத்துவ மனைகளிலிருந்தும் நோளாளர்கள் இதற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றனர்.

பு.பி.தீ.க. கூறின் படுக்கை இருப்பாட்சி 2011ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. பு.பி.தீ.க. கூறுக்கான அனுமதிப்புகள் மகப்பேற்றியல் பகுதியில் குறைப்பிரசவங்களினதும் எடை குறைந்த பிரசவங்களினதும் எண்ணிக்கையைப் பொறுத்துள்ளது. நடப்பு ஆண்டில் மொத்தம் 52 புதுப் பிரசவ சிசுக்கள் மேற்பரப்பு திறச் செயல் சிகிச்சை அளிக்கப்பெற்றன.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| அனுமதிப்புகள் | 897 | 937 | 892 | 916 | 824 |
| படுக்கை இருப்பாட்சி | 51% | 60% | 46% | 54% | 71% |

படுக்கை இருப்பாட்சி




## 4. பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று சிகிச்சைக்கூறுகள்

124 படுக்கைகளையுடைய இந்த இரண்டு சிகிச்சைக் கூடங்களும் 2011ஆம் ஆண்டில் மிதமான மட்டத்திலான 83% படுக்கை இருப்பாட்சியைப் புலப்படுத்துகின்றன. இக்கூறு மகப்பேற்றியல் துறையிலும் பெண்ணோயியல் துறையிலும் மிக நவீன வசதிகளைக் கொண்டுள்ள பெருமைக்குரியது.

## 4.1 நோயாளர் கல்வி

ஆரம்பகால கர்ப்பத்தின் மதிப்பீடுகளைச் செய்வதற்காக கர்ப்பமுறுவதற்கு முந்திய வெளிக்கள விஜயங்கள் மருத்துவ ஆலோசகரின் தலைமையிலான மருத்துவர்களினதும் தாதிகளினதும் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றன. பிரசவத்தின் பின்னரான வகுப்புகளை நடாத்துவதன்மூலம், கர்ப்பகாலத்தின்போதான இயன்மருத்துவத்தை அறிமுகம் செய்தல், பிரசவ அறைக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் பரிச்சயப்படுத்துதல் என்பவற்றின்மூலம் நோயாளர் கல்வி மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.2 பிரசவத்தின் பின்னரான பிணி ஆய்வுகூடங்கள்

பிரசவத்தின் பின்னரான பிணி ஆய்வுகூடங்களில் பார்வையிடப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை வரையறையற்றது. யூஎஸ்எஸ்/டொப்லர் வசதிகள் பிரசவத்திற்குப் பின்னரான பிணி ஆய்வுகூடத்திலும் சிகிச்சை கூடங்களிலும் உள்ளன.

## 3.3 ஆற்றுப்படுத்துகைகள்

இந்த இரு கூறுகளும் நாடு முழுவதிலுமிருந்து மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள நோயாளர்களின் ஆற்றுப்படுத்துகைகளைப் பெறுகின்றன. இவற்றுள் பாரதூரமான pre-eclampsia, பல்கூறு கர்ப்பம், சிசு வளர்ச்சி மட்டுப்பாடு என்பனவும் அடங்கும். தீவிர கண்காணிப்பு தேவைப்படும் நோயாளர்களுக்கு மிகுந்த சார்நிலைப் பராமரிப்பு வழங்கப்படுகின்றது.

## 3.4 சேவைக்காலப் பயிற்சி

மருத்துவ அலுவலர்கள், ஏவலர்கள் முதலானோர் உட்பட சிகிச்சைக்கூடப் பணியாட்தொகுதியினருக்கு ஜேர்னல் களரியுடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் கிரமமாக சேவைக்காலப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

## 3.5 வரைவேடுகளும் வழிகாட்டுநெறிகளும்

சிறந்த பராமரிப்பு சேவையை வழங்குவதற்கு பொருத்தமான தேசிய, சர்வதேச வரைவேடுகளும் வழிகாட்டு நெறிகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆபத்தான நிலையிலுள்ள நோயாளர்களுக்கு கூட்டுஒழுங்குமுறைகள் வழங்கப்படுகின்றன.

## 3.6 தாய்மை இறப்பு

மிகுந்த நோய்வாய்ப்பட்ட தாய்மார் பராமரிக்கப்பட்டபோதிலும் இந்தப் பகுதி நாட்டிலேயே மிகக்குறைந்தளவிலான தாய்மை இறப்பு வீதத்தைக் கொண்டுள்ளது.

## 3.7 பிரசவத்தின் பின் பராமரிப்பு

பிரசவத் தாயின் பராமரிப்பு தொடர்பில் ஒவ்வொரு தாய்க்கும் பிரசவத்தின் பின்னரான பராமரிப்புத் திட்டம் வழங்கப்படுகின்றது. நீரிழிவு மற்றும் அதிக இரத்த அழுத்தம் என்பவற்றிற்குட்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டுத் தாய்மாருக்கு பிரசவத்தின் பின்னரான காலப்பகுதியில் கிரமமான தொடர் பராமரிப்பு வழங்கப்படுகின்றது.

படுக்கை இருப்பாட்சி




## 3.8 பகுதியிலுள்ள வசதிகள்

இப்பகுதி பணியாட்கொகுதியினரின் அறிவை விருத்திசெய்வதற்கு மிக நவீன நூலகமொன்றையும் இணையத்தளம், மின்னஞ்சல் போன்ற வசதிகளையும் கொண்டுள்ளது. எமது சிகிச்சைக்கூடத்தில் நோயாளர்களுக்கு சிறந்த சுகாதார சூழ்நிலை பேணப்படுகின்றது. அவர்களுக்கு பொழுதுபோக்கு மற்றும் நூலக வசதிகளும் உண்டு.

## 3.9 நோயாளர் பரிசீலனைக்கூடங்கள்

அனைத்து நோயாளர்களுக்கும் கூட்டு ஒழுங்குமுறைகள் வழங்கப்படுகின்றன.

## 3.10 பெண்ணோயியல்

பெண்ணோயியலில் லெப்ரோஸ்கோப்பி, லெப்பரோடமி, VH & R, TOT, ஹிஸ்டெரொஸ்கோப்பி என்பவற்றிலும் பெண்ணுறுப்பு மறுசீரமைப்பு என்பனவும் நவீன சத்திரசிகிச்சை முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. சித்திரசிகிச்சைக்குப் பின்னர் வரைவேட்டின்படி நோயாளர்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றனர்.

## 3.11 சத்திரசிகிச்சை நடைமுறைகள்

லெப்பரோஸ்கோப்பிக் சத்திரசிகிச்சை நடைமுறைகள் அனைத்தும் வீடியோ படமெடுக்கப்பட்டு நோயாளர்கள் விடுவிக்கப்படுமுன்னர் நோயாளர்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் காட்டப்பட்டு மேலதிகத் திட்டடங்கள்பற்றி உரையாடப்படுகின்றன.

## 3.12 சத்திரசிகிச்சைக்குப்பின்னரான நோயாளர்களின் தொடர் பராமரிப்பு

சத்திரசிகிச்சையை முடித்துக்கொண்ட நோளாளர்கள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு புற்றுநோய், IVF. பிரசவத்தின் பின்னரான பணி ஆய்வு மற்றும் சி3கிச்சைக் கூடங்கள் போன்றவற்றின் மேலதிக கட்டுப்பாட்டிற்கு ஏனைய உள்நாட்டு/வெளிநாட்டு மருத்துவ நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றனர்.

## 3.13 கணக்காய்வுகள்

கணக்காய்வுகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகன்றன. கண்டுபிடிப்புகள் பிரசவத்திற்கு முந்திய மற்றும் எதிர்மறை விளைவுகள் தொடர்பான கூட்டங்களில் கலந்துரையாடப்டுகின்றன.

## 3.14 ஆராய்ச்சி செயற்பாடுகள்

மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயில் பகுதிகள் பட்டப்பின் மருத்துவ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பயிற்சி நிலையமாகும். மாதவிடாய் நிறுத்தம் மற்றும் hystra histra histrescopy பரிசோதனைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. எல்லா தரங்களையும் சேர்ந்த மருத்துவ அலுவலர்கள் இந்த ஆய்வுகளில் பங்குபற்றுகின்ற்னர்.

படுக்கைஇருப்பாட்சி

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 329 | 291 | 288 | 291 | 294 |
| நோயாளர் வருகை | 31109 | 33026 | 28290 | 27277 | 25421 |
| அனுமதிப்புகள் | 8213 | 7720 | 7777 | 7810 | 7871 |
| படுக்கை இருப்பாட்சி | 84% | 78% | 79% | 81% | 83% |
| பிரசவங்கள் | 4355 | 4417 | 4091 | 3476 | 3877 |




## 5. பொது சத்திர சிகிச்சை

மூன்று பொது சத்திரசிகிச்சைக்கூடங்களின் பொதுப்படையான செயற்பாடு முந்திய ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து கடந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

| | 2007 | 2 008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 374 | 435 | 422 | 431 | 444 |
| நோயாளர் வருகை | 13531 | 12863 | 12895 | 12633 | 13001 |
| அனுமதிப்புகள் | 6770 | 6759 | 6285 | 6358 | 6763 |
| படுக்கை இருப்பாட்சி | 58% | 59% | 58% | 45% | 51% |
| சத்திர சிகிச்சைகள் | 4135 | 4702 | 4706 | 3751 | 3713 |

படுக்கை இருப்பாட்சி

படுக்கை இருப்பாட்சி




\

## 6. கண் சிகிச்சைச் கூறு (OPTHALMOLOGY)

இக்கூறு நவீன நுண் நீக்கறுவை கட்புரை சத்திரசிகிச்சையில் தனித்துவம் பெற்றுள்ளது. அல்கன் "இன்பினிட்டி பாகோ சிஸ்டம்" கலிஸ்டோ கட்புல ஒலிப்பதிவு முறைமையுடன் LUMERA நுணுக்குக்காட்டிஇ யுணநளைள ழிஅை 160 நுணுக்குக் காட்டி போன்ற வசதிகள் சத்திர சிகிச்சைக் கூடத்தில் உள்ளன. செய்யப்பட்டதையடுத்து 2.2 மிமீ ஒலியில் கட்புரை நடைமுறை சாத்தியமடைந்துள்ளது. இக்கட்புரை சிகிச்சை முறை குறைந்தளவு உருட்சிப்பிளவுடன் வெண்படல சத்திரசிகிச்சைக்கு வழிவகுத்துள்ளது.

விழிக்கோளத்திற்குள்ளான கண் வில்லையைப் பதியங்கள் சகிதம் அண்ணளவாக 2900 கட்புரை நடைமுறை மேற்கொள்ளப்பட்டது.

உயிர் அளவையியல் வசதிகளில் தொடுகையற்ற அமிழ்த்தும் உயிர் அளவையியல் வசதிகளுடனான ILO மாஸ்டர் நுண்ணொலி A ஸ்கேனும் அடங்கும்.

ILO மாஸ்டர் கண்வில்லை சக்தி மதிப்பீட்டை மிகவும் நுணுக்கமாகச் செய்ய உதவுகின்றது. இது கட்புரை சத்திரசிகிச்சைகளின் பெறுபேற்றை மிகவும் அச்சொட்டாக எதிர்வுகூற உதவுகின்றது.

இக்கூறு வேறும் பெரும்பாலான கண் சத்திரசிகிச்சை நடைமுறைகளையும் பேணுகின்றது. இதில் கெநெற்றோகோணஸ் கோளாறுக்கு ஆழமான முற்புரை லமிலர் கெரற்றோ பிளாஸ்டி மற்றும் அகவணி நோய்களுக்கு டிசிமெஸ் கலைதல் அகவணி கெநெற்றோ பிளாஸ்டி ஆகிய இரண்டும் சம்பந்தப்பட்ட லமிலெர் கொநெற்றோ பிளாஸ்டியும் அடங்கும். இது உடலுக்கும் கெநெற்றோ பிளாஸ்டியுடன் தொடர்புடைய சிக்கல்களையும் பக்க விளைவுகளையும் குறைக்க உதவுகின்றது. லமெலர் கெநெற்றொ பிளாஸ்டி நடைமுறை எமது கூறில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இக்கூறு வைரியோரெட்டினல் சத்திரசிகிச்சைகளுக்கான வசதிகளையும் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு அண்ணளவாக 250 வைரியோரெட்டினல் சத்திர சிகிச்சைகள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் இக்கூறு வழியமுத்த மிகை சத்திரசிகிச்சைகளையும் வாக்குக்கண்ணுக்கு எக்ஸ்ட்ராஓகியூலர் சத்திர சிகிச்சைகளையும், தோண்டியெடுத்தல்கள், டக்ரோசிஸ்டோரிநொஸ்மி, ஒப்பனை மூடி சத்திரசிகிச்சை, டார்சோர்ஹப்பி முதலியவற்றையும் நிறைவேற்றுகின்றது.

பிணியாளர் பரிசீலனைகள் வாரத்தில் மூன்று முறை நடைபெறுகின்றன. மாதமொன்றுக்கு 1250 நோயாளர்கள் பரிசீலனைக் கூடங்களுக்கு வருகைதருகின்றனர். நீரிழிவு சார்ந்த விழித்திரை நோய், விழியழுத்தம், ஒளிக்கோட்டக் கோளாறுகள் முதலியனவும் இக்கூறில் கையாளப்படுகின்றன. சிறுவர்களுக்கான பிணி பரிசீலனைக் கூடம் மாதமொருமுறை நடைபெறுகின்றது.

நீரிழிவு ரெட்டினோப்தி சிகிச்சைக்கும் ஏனைய நிலைமைகளுக்கும் மாதமொன்றுக்கு அண்ணளவாக 55 போக்கல் லேசர் சிகிச்சை முறைகளும் அண்ணளவாக 45 பான்ரெட்டினோல் போட்டோகொக்கூலேசன் நடைமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கண்டறியப்பட்ட நோய்களை உறுதிப்படுத்துவதற்கும் முதுமை தொடர்பிலான கரும்புள்ளி சிதைவுறுவதை (ARMD) தகுந்த விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் அத்தியாவசியமான புளோரிசீன் அஞ்சியோகிராபி மற்றும் இன்டோசயனின் கிரீன் அஞ்சியோகிராபி வசதிகளையும் இக்கூறு கொண்டிருக்கின்றது. அயோடோபதிக் பொலிபொயிடல் சோரொய்டோ வஸ்கியூலோபதி (IPCV) கோளாறுக்கு சிகிச்சையளிப்பதற்கு ஒளித்துளைமையியல் சிசிக்சைக்கு நாட்டிலுள்ள ஒரேயொரு கூறு இதுவாகும்.

முன்புறப் பிரிவைச் சேர்ந்த OCT ஸ்கேனர ் இந்த வகையில் நாட்டிலுள்ள ஒரேயொரு ஸ்கேனர் இதுவாகும். இது கண்ணின் முன்புறப் பிரிவையும் விசேடமாக விழியழுத்த விசை நோயாளிகளின் கண்ணின் கோணத்தையும் பகுப்பாய்வு செய்வதில் இது மிகவும் பெறுமதிவாய்ந்ததாகும். ஏனைய வசதிகளுள் B- ஸ்கான் நுண்ணொளி பொறி Corneal Topoggrapher என்பன அடங்கும்

இக்கூறு பல ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை மேற்கொள்கின்றது. கடந்த ஆண்டு இது 05 ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தது. இக் கட்டுரைகள் லமெலர் கரொற்றோ பிளாஸ்டி நடைமுறைகள், DEEK மற்றும் DALK, பாக்கோமல்சிபிகேசன் உள்விழிக்கோள கண் வில்லைகளை பதிதல் விசான்டே முன்புறத் துண்டாக்கம் OCT இன் பயன்பாடுகள், பின்புற கெம்சியூலர் மினுக்கத்தின் பெறுபேறுகள், சவ்வி குறுக்கீட்டு இணைப்பின் பெறுபேறுகள் என்பன பற்றியதாகும்.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி | 146 | 140 | 140 | 149 | 144 |
| நோயாளர் வருகை | 15341 | 14425 | 14837 | 14651 | 14538 |
| அனுமதிப்புகள் | 1842 | 1931 | 1931 | 1742 | 1766 |
| படுக்கை இருப்பாட்சி | 69.4% | 70% | 68% | 58% | 61% |
| சத்திர சிகிச்சைகள் | 3304 | 3746 | 3814 | 3814 | 3506 |




## 7. தானியங்கி மூக்கு, குரல்வளை (செ.நா.தொ.) சிகிச்சைச் கூறு

முந்திய ஆண்டுகளுடன் ஒப்புநோக்குமிடத்து படுக்கை இருப்பாட்சி ரீதியிலும் அனுமதிப்புகள் ரீதியிலும் நோயாளிகளின் வருகையிலும் இக்கூறின் செயற்பாடு திருப்திகரமற்றதாக உள்ளது. வாரமொன்றில் நடைபெற்ற மருத்துவக் கூடங்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டாகக் குறைந்துள்ளது.

பேச்சு சிசிக்சைக் கூறு 2011இல் 608 நோயாளர்களுக்கும் செவிப்புல சிகிச்சை சேவைகள் உள்நோயாளர்களுக்கும் சிகிச்சைக்கூட நோயாளர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இது மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தின் ஒரு பகுதியுமாகும். 2011ஆம் ஆண்டின்போது செவிப்புலக்கூறு 1220 செவிப்புல ஆய்வியல் சேவைகளை ஆற்றியுள்ளது. Tympanograms சேவைகள் 818 ஆகும்.

## (Autolaryngology) செ. நா. தொ. சிகிச்சைக் கூறு

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 98 | 101 | 99 | 99 | 98 |
| நோயாளர் வருகை | 7515 | 7729 | 7554 | 7064 | 6382 |
| அனுமதிப்புகள் | 1877 | 1730 | 1558 | 1477 | 1314 |
| படுக்கை இருப்பாட்சி | 47% | 42% | 38% | 34.3% | 30% |
| சத்திர சிகிச்சைகள் | 724 | 766 | 690 | 687 | 543 |
| பேச்சு சிகிச்சை | 1225 | 1121 | 327 | 666 | 608 |

## 8. எலும்பு முறிவு சிகிச்சைக் கூறு

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் (2011) இச்சிகிச்சைக் கூறினால் 82 முழங்கால் மாற்றுச் சத்திரச் சிகிச்சைகளும் 30 இடுப்பெலும்பு மாற்றுச் சத்திரச் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன.




எலும்பு முறிவு சிகிச்சைச் கூறுகள்

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 98 | 96 | 98 | 98 | 99 |
| நோயாளர் வருகை | 7870 | 8029 | 8761 | 8395 | 8721 |
| அனுமதிப்புகள் | 2167 | 2206 | 2159 | 2240 | 1984 |
| படுக்கை இருப்பாட்சி | 82% | 88% | 112% | 65.34% | 61% |
| சத்திர சிகிச்சைகள் | 3072 | 3193 | 3928 | 2202 | 1966 |

## 9. இருதய, மார்பக சத்திரசிகிச்சைக் கூறு

இரண்டு இருதய, மார்பக சத்திர சிகிச்சை ஆலோசகர்களினால் முகாமை செய்யப்பட்ட இத்தனித்துவக்கூறு கொரனறி ஆட்டரி பைபாஸ் கிராவ்டிங் உட்பட வளர்ந்தோர் இருதய சத்திரசிகிச்சைக்கான தேவை இப்பொழுது அதிகரித்துள்ளது. இது சிறுவர் இருதய சத்திர சிகிச்சைகளுக்கு நற்பெயர் பெற்றுள்ளது. அநேகமான விவகாரங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. முந்திய ஆண்டுகளுடன் ஒப்புநோக்குமிடத்து பொதுவான செயற்பாட்டில் மேம்பாடு காணப்படவில்லை. இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளுள் 162 சிகிச்சைகள் இருதய நாள மாற்றுப்பாதை (C.A.B.G.) சத்திரசிகிச்சைகளாகும். சத்திரசிகிச்சைகளின் மொத்த எண்ணிக்கை 17ஆல் குறைந்துள்ளது. இதற்குப் பல காரணங்களை எடுத்துக்கூறலாம். அவற்றுள் சில 2007ஆம் ஆண்டு லேடி ரிஜ்வே மருத்துவமனையிலும் கண்டி போதனா வைத்தியசாலையிலும் புதிய கூறுகள் திறக்கப்பட்டு நோயாளர்களுக்கு இலவசமாக சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாகும். இதேவேளை நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரித்ததையடுத்து இருதய சத்திரசிகிச்சைக்கான மொத்தச் செலவும் அதிகரித்துள்ளதுடன் பொது மக்கள் கொடுப்பனவு செய்யும் வாய்ப்பையும் பாதித்துள்ளது.




## இருதய, மார்பக சத்திர சிகிச்சைச் கூறு

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 97 | 91 | 96 | 100 | 94 |
| நோயாளர் வருகை | 4831 | 4238 | 4069 | 4015 | 3663 |
| அனுமதிப்புகள் | 805 | 667 | 667 | 644 | 485 |
| படுக்கை இருப்பாட்சி | 65% | 66% | 66% | 56% | 87% |
| சத்திர சிகிச்சைகள் | 357 | 239 | 239 | 224 | 205 |



## 10. இருதய சிகிச்சை மற்றும் இருதய நோய் புலனாய்வுக் கூறு

பிணி ஆய்வுக்கூறு வருகை மற்றும் அனுமதிப்புகள் தொடர்பாக இக்கூறின் கொள்கை வேறு கூறுகளிலிருந்து ஆற்றுப்படுத்தப்பட்ட நோயாளிகளைப் பரிசோதனை செய்வதாகும். இக்கூறினால் மேற்கொள்ளப்பட்ட மார்பக எதிரொலி வரைவு (எக்கோ கார்டியோகிராம்) புலனாய்வுகளின் எண்ணிக்கை 103ஆல் அதிகரித்துள்ளது. முந்திய ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து அழுத்த விசைச் சோதனைகளின் எண்ணிக்கை 85ஆல் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு அம்பியூலன்ஸ் வாகனத்துடனான இரத்த அழுத்தக் கண்காணிப்புக்கூறு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. இதனையடுத்து இக்கூறின் புலனாய்வுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடியதாயிருந்தது. 2010ஆம் ஆண்டு Cath ஆய்வுகூடம் 542 அஞ்சியோகிராம் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### இருதய சிகிச்சை மற்றும் இருதய நோய் புலனாய்வுக் கூறு

| | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** |
|---|---|---|---|---|---|
| நடந்த பிணி ஆய்வுகள் | 91 | 95 | 97 | 99 | 99 |
| நோயாளர் வருகை | 4304 | 5040 | 5027 | 5234 | 5582 |
| அனுமதிப்புகள் | 1248 | 1651 | 1813 | 1829 | 1944 |
| படுக்கை இருப்பாட்சி | 50% | 60.3% | 68.3% | 52.10% | 56% |
| எக்கோ கார்டியோகிராம் | 9858 | 10854 | 12199 | 12360 | 12463 |
| அழுத்த விசைச் சோதனைகள் | 1743 | 1863 | 2000 | 2050 | 1965 |
| கொரனரி அஞ்சியோகிராம் சோதனை | 367 | 432 | 445 | 483 | 542 |
| தற்காலிக பேஸ்மேக்கர் | 3 | 7 | 22 | 16 | 18 |
| நிரந்தர பேஸ்மேக்கர் | 4 | 7 | 13 | 10 | 21 |
| வலப்புற இருதய கொரனரி பேர்குடேனியஸ் ட்ரான்ஸ்லூமினல் கொரனரி அஞ்சியோகிராம் | 15 | 6 | 2 | 1 | 3 |
| கோரனரி அஞ்ஜியோகிராம் | 69 | 94 | 77 | 103 | 121 |
| ஹோல்டர் கண்காணிப்பு சோதனை | 248 | 42 | 20 | 297 | 387 |

## 10. உள்ளுறுப்பு ஆய்வியல் கூறு

இக்கூறு இரைப்பை மற்றும் குடல்சார்ந்த வியாதிகளினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளின் புலனாய்வையும் சிகிச்சையையும் மேற்கொள்கின்றது. சத்திர சிகிச்சை மருத்துவர்களுக்கு மேலதிகமாக மருத்துவர்களும் புலனாய்வுகளை மேற்கொள்வதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இக்கூறின் செயற்பாட்டில் மேம்பாடு காணப்படுகின்றது.

உணவுக்குழல் சார்ந்த வார்சியல் பேண்டிங் (E.R.C.P.) சிகிச்சைகளில் 2008 முதல் 2011 வரையிலான ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது. ஏனைய மருத்துவமனைகள் எந்தவிதமான உள்ளுறுப்பு ஆய்வியலுக்கும் ஆற்றுப்படுத்தாமையும் இதனை அந்தந்த மருத்துவமனைகளே மேற்கொள்ளுதலுமே இதற்கான காரணமாகும். ஆத்துடன் உள்ளுறுப்பாயள்வியல் சோதனைகளை இவை நோயாளர்களுக்கு இலவசமாக அளிக்கின்றன. இக்கூறின் மொத்தச் செயற்பாடுகளுள் 46% வீதமானவை 06ஆம் இலக்க சிகிச்சைக் கூடத்திலிருந்த நோளாளிகள் தொடர்பானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### உள்ளுறுப்பு ஆய்வியல் கூறு

| | 2007 | 2007 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| ஜீ.ஐ. உள்ளுறுப்பு ஆய்வுகள் | 1535 | 1579 | 1832 | 1754 | 1759 |
| பெருங்குடல் புலனாய்வுகள் | 76 | 380 | 531 | 552 | 653 |
| ஈ.ஆர்.சீ.பி. | 43 | 33 | 21 | 24 | 15 |
| செலரோதெரப்பி | 2 | 8 | 11 | 2 | 0 |
| புரொக்கோஸ்கோப்பி | 45 | 46 | 41 | 35 | 25 |
| ஈசோபேஜியல் வார்சியல் பேண்டிங் | 198 | 203 | 166 | 210 | 226 |
| மொத்தப் பரிசோதனைகள் | 1899 | 2249 | 2915 | 2867 | 3020 |

## 11. சிறுநீரக சிகிச்சை மற்றும் குருதிச் சுத்திகரிப்புக் கூறு

2011ஆம் ஆண்டு இக்கூறின் செயற்பாட்டில் மேம்பாடு காணப்படுகின்றது. நோளாாளர் வருகையில் ஓரளவு வீழ்ச்சி காணப்படுகின்றது. குருதிச் சுத்திகரிப்பில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்படுகின்றது என்பதனை கீழேயுள்ள பட்டோலை காட்டுகின்றது.

2011ஆம் ஆண்டில் பன்னிரெண்டு (12) சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நோயாளிகளுக்கு அவர்களது சத்திரசிகிச்சைகளுக்கென சனாதிபதி நிதியத்திலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டது. பின்தொடர் மருந்துகளும் அதிக விலையுள்ளவையாதலால் இம்மருந்துகளை இலவசமாக வழங்குமாறு சுகாதார அமைச்சுடன் நாம் மேற்கொண்ட இணக்கப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் சுகாதார அமைச்சு இந்நோயாளர்களுக்கு இவற்றை இலவசமாக வழங்க உடன்பட்டுள்ளது.

### சிறுநீரக சிகிச்சை மற்றும் குருதிச் சுத்திகரிப்புக் கூறு

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடைபெற்ற பரிசோதனைக்கூடங்கள் | 146 | 147 | 144 | 142 | 142 |
| நோளாளர் வருகை | 10137 | 9031 | 9446 | 9876 | 9751 |
| படுக்கை இருப்பாட்சி | 75% | 88% | 87% | 86% | 73 |
| குருதிச் சுத்திகரிப்புகளின் எண்ணிக்கை | 3838 | 4072 | 4460 | 4668 | 4700 |
| சிறுநீர் உயிரணு சோதனை | 88 | 78 | 75 | 76 | 66 |

*படுக்கை இருப்பாட்சி வீதத்தைக் கணிப்பிடுகைளில் சபையின் அங்கீகராத்துடன் திருத்தம்செய்யப்பட்டது.

### குருதிச் சுத்திகரிப்பின் எண்ணிக்கை



## 12. பிணி ஆய்வுகூட சேவைகள்

மருத்துவமனையின் ஆய்வுகூட சேவைகள் பகுப்பாய்வு அறிக்கைகளை அதிவிரைவாக வழங்கும் ஆற்றல்கொண்ட அதி நவீன மற்றும் இலத்திரனியல் தன்னியக்க பகுப்பாய்வு உபகரணங்களுடன் முற்றிலும் தன்னியக்கமயமாக்கப்பட்டுள்ளன.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| உயிரியல் இரசாயன சோதனைகள் | 275383 | 397042 | 396226 | 379259 | 401098 |
| குருதியியல் சோதனைகள் | 199891 | 209637 | 250537 | 245175 | 250878 |
| உயிர் தசைக்கூறு புலனாய்வுகள் | 19854 | 29627 | 24301 | 23484 | 22405 |
| நுண்ணுயிரியல் மாதிரிகள்* | 56733 | 84020 | 69225 | 76584 | 63526 |
| வெ.நோ.ப. ஆய்வுகூட சோதனைகள் | 45432 | 65509 | 61072 | 48495 | 45296 |
| மொத்தம் | 597293 | 785835 | 785835 | 772997 | 783203 |

*ஒவ்வொரு மாதிரிகைமீதும் 3 - 5 சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குருதிச் சத்திகரிப்புகளின் எண்ணிக்கை




## 13. மருத்துவமனைக் குருதி வங்கி

மருத்துவமனைக் குருதி வங்கி 24 மணித்தியால சேவையை வழங்குகின்றது. இது சுயேச்சையான நிறுவனமொன்றாக முகாமைசெய்யப்படுகின்றது. இதன் காரணமாக நுகர்வுப் பொருட்களின் தட்டுப்பாடு, போதிய குருதி கையிருப்பில் இல்லாமை என்பன உட்பட நிறுவனம் பல செயல்முறைப் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 2005 செப்டெம்பரில் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சின் அங்கீகாரத்துடன் தேசிய குருதி மாற்றுச் சேவைக்கும் (தே.கு.மா.சே.) ஸ்ரீ.ஜ.பொ.ஆ. வுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டது. இந்த ஏற்பாட்டையடுத்து நுகர்வுப் பொருள் அனைத்தும் ஸ்ரீ.ஜ.பொ.ஆ. வுக்கு தே.கு.மா.சே. யினால் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. அத்துடன் நோளாயர்களுக்குக் குருதியும் குருதிப் பொருட்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இக்கூறு தனித்துவமான இருதய சத்திரசிகிச்சைகளுக்கும் சிறுநீரக மாற்று சிகிச்சைகளுக்கும் புதுப்பிரசவ தீவிர பராமரிப்புக் கூறுக்கும் மருத்துவ, சத்திர சிகிச்சை மற்றும் பெண்ணோயியல், மகப்பேற்று சிகிச்சைக் கூறுகளுக்கும் குருதியையும் குருதி உறுப்புகளையும் விநியோகிக்கின்றது. குருதி வழங்கப்படுவதற்குமுன்னர் அது உலக சுகாதார நிறுவனத்தின் விதப்புரைகளுக்கிணங்க நுணுக்கமாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. குருதி மற்றும் குருதி உற்பதிப் பொருட்கள் நோளாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

15. ஊடுகதிரியல் பகுதி

210ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து 2011ஆம் ஆண்டில் CT ஸ்கேன் ஆய்வுகளில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. CT ஸ்கேன் ஆற்றுப்படுத்துகை அனைத்தும் 2008இல் மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. 2010இல் ஸ்ரீ.ஜ.பொ.ம.வில் மேற்கொள்ளப்பட்ட CT ஸ்கேன் ஆய்வுகள் 5568

கதிரியல் பகுதி

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| கதிர்ப் படம் எடுக்கப்பட்ட நோளாளிகள் | 38721 | 49174 | 42526 | 40433 | 40520 |
| வழமையான ஊடுகதிர் பரிசோதனைகள் | 47440 | 59685 | 50140 | 46738 | 46975 |
| சீரீ ஸ்கேன் ஆய்வுகள் | 973 | 0** | 4213 | 4728 | 5568 |
| நுண்ணொலி ஸ்கேன் | 5536 | 7816 | 8834 | 8906 | 8519 |
| ஐவீவி | 354 | 341 | 185 | 79 | 36 |
| மபோகிராம் | 171 | 222 | 424 | 407 | 364 |

## 16. கட்டணம் அறவிடும் சிகிச்சைக் கூடங்கள்

### 16.1 வகுப்பு 1

1ஆம் வகுப்பு சிகிச்சைக் கூடத்தில் தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி வசதிகள் கொண்ட வளிச்சீராக்கப்பட்ட 18 சிகிச்சைக் கூடங்கள் உள்ளன. (சிகிச்சைக்கூடம் 3) இந்த அறைகளுக்கு மிக அதிக அளவிலான தேவை உண்டு.

### வகுப்பு 1

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| அனுமதிப்புகள் | 1573 | 1578 | 1764 | 1840 | 1632 |
| படுக்கை இருப்பாட்சி | 98% | 102.% | 108% | 104% | 98% |

### வகுப்பு 2

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| அனுமதிப்புகள் | 4837 | 5367 | 5625 | 5153 | 4674 |
| படுக்கை இருப்பாட்சி | 50% | 55% | 55% | 45.8% | 42% |

95 படுக்கைகளைக் கொண்ட 2ஆம் வகுப்பு சிகிச்சைக் கூடங்கள் இரண்டும் 90 படுக்கைகளைக் கொண்டுள்ளன. (சிகிச்சைக் கூடம் 04 – 48; சிகிச்சைக் கூடம் 5 – 47) 2010ஆம் ஆண்டுடன் ஒப்புநோக்குமிடத்து பொதுவில் படுக்கை இருப்பாட்சியும் அனுமதிப்புகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளன.

## 17. பொது தீவிர கண்காணிப்புக் கூறு (ஐசீயூ)

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| சீசீயூ | 361 | 382 } | 945 | 923 | 966 |
| ஐசீயூ | 352 | 369 } | | | |
| இறப்புகளின் எண். | 176 | 192 | 188 | 206 | 200 |
| அத்துடன் விகிதாசாரம் | 24.6% | 25.5% | 20% | | 22% |
| படுக்கை இருப்பாட்சி | 111% | 100% | 101.1% | ` 107% | 78.3 |

படுக்கை இருப்பாட்சி 78.3% 20% - 30% இறப்பு வீதத்திற்குக் காரணம் தீவிர கண்காணிப்புப் பிரிவுக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன் மாரடைப்பு நோயாளர்கள் வேறு இடங்களில் அனுமதிக்கப்படுவதேயாகும்.

## 18. இயன் மருத்துவப் பகுதி

இக்கூறின் செயற்பாடு பொதுவில் வீழ்ச்சியுற்றுள்ளது.

இயன் மருத்துவப் பகுதி

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| புதிய நோயாளிகளின் எண். | 2228 | 2103 | 1703 | - | - |
| நோயாளர் வருகை | 26365 | 19819 | 17150 | - | - |
| வழங்கப்பட்ட சிகிச்சைகளின் எண். | 36089 | 29969 | 27621 | - | - |
| சுவாசப்பை செயற்பாட்டுச் சோதனைகளின் | 281 | 209 | 89 | - | - |

## 19. ஈஈசீ/ஈஈஜீ பகுதி

நடப்பு ஆண்டில் பயிற்றப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள் இருந்தமையால் மேற்கொள்ளப்பட்ட இலெக்ட்ரோ என்சீபெலோகழிராம் (ஈஈசீ) சோதனைகள் அதிகரித்துள்ளன.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| ஈசீஜீ | 33971 | 36086 | 37960 | 38166 | 36156 |
| ஈஈஜீ | 347 | 265 | 487 | 860 | 487 |
| ஈஎம்ஜீ | | | 863 | 860 | 1063 |

ஈசீஜீ சோதனைகளின்ன எண்ணிக்கை




## 20. நரம்புத் தொகுதி சிகிச்சைப் பிரிவு

நரம்புத்தொகுதி சிகிச்சைப் பிரிவு 2007ஆம் ஆண்டு தாபிக்கபப்ட்டதுடன் 16ஏ இலக்க சிகச்சைக் கூடத்தில் இப்பிரிவிற்கு 8 படுக்கைகள் ஒதுக்கபப்பட்டன.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 211 |
|---|---|---|---|---|---|
| நடைபெற்ற பரிசோதனைக் கூடங்கள் | 115 | 97 | 96 | 2063 | 102 |
| நோயாளர் வருகை | 1232 | 1355 | 2394 | 2063 | 2615 |
| அனுமதிப்புகள் | 54 | 167 | 140 | 81 | 128 |
| படுக்கை இருப்பாட்சி | 21-1% | 72.5% | 117% | 14.51% | 26.9% |



## 21. வாதநோய் சிகிச்சைப் பிரிவு

இக்கூறு 2007ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 16ஏ இலக்க சிகச்சைக் கூடத்தில் இப்பிரிவிற்கு 8 படுக்கைகள் ஒதுக்கபப்பட்டன.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடைபெற்ற பரிசோதனைக் கூடங்கள் | 145 | 142 | 143 | 144 | 142 |
| நோயாளர் வருகை | 2046 | 2332 | 3581 | 4287 | 3727 |
| அனுமதிப்புகள் | 70 | 128 | 115 | 118 | 65 |
| படுக்கை இருப்பாட்சி | 17% | 38% | 38% | 13% | 9.8% |




## 22.. நரம்புத் தொகுதி சத்திரசிகிச்சைப் பிரிவு

நரம்புத் தொகுதி சத்திர சிகிச்சைப்பிரிவு 2007ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு 2010ஆம் ஆண்டில் தீவிர கண்காணிப்பு வசதிகளுடன் புறம்பான சிகிச்சைக் கூடத்திற்(சகிச்சைக்கூடம் 18) மாற்றப்பட்டடது.

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| நடைபெற்ற பரிசோதனைக் கூடங்கள் | 72 | 93 | 95 | 93 | 92 |
| நோயாளர் வருகை | 434 | 693 | 1132 | 850 | 650 |
| அனுமதிப்புகள் | 245 | 841 | 1015 | 963 | 763 |
| படுக்கை இருப்பாட்சி | 81.5% | 363.2% | 401% | 83% | 34% |
| சத்திரசிகிச்சைகள் | 98 | 196 | 340 | 194 | 67 |




இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 117,880,041 ஆக காணப்படினும் பெறுமானத்தேய்வாக ரூபா 140,202,500 கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 22,322,459 இனால் ஆண்டின் பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டில் வைத்தியசாலைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 2 அம்பியூலன்ஸ் வாகனங்களின் பெறுமதி ரூபா 5,785,000 ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

i. வாகனங்களின் பெறுமதி மூலதன மானியங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக அப்பெறுமதியினால் மூலதன மானிய மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் மீதான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,446,250 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டின் பற்றாக்குறை அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

ii. முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,157,000 வருடாந்த பெறுமானத்தேய்வினை கணிப்பிட்டு கணக்கீடு செய்யாதிருந்தமை காரணமாக முன்னைய ஆண்டின் முன்னெடுத்துவரப்பட்டிருந்த பற்றாக்குறையும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வினை கணக்கீடு செய்யாமை காரணமாக ஆண்டின் பற்றாக்குறையும் ரூபா 1,157,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

iii. இந்த நன்கொடைப் பெறுமதியும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலாகவும் காசு வெளிப்பாய்ச்சலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஏனைய கட்டிடங்களிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 93,270 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால் அத்தொகையால் ஆண்டின் பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நன்கொடையாக கிடைத்திருந்த சொத்துக்களில் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியிலிருந்தான அன்பளிப்பான ரூபா 2,800,000 பெறுமதியான நரம்பியல் வீரிய கண்காணிப்பான் (Nerve Stimulator Monitor) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 700,000 ஆல் குறைவாக பதியப்பட்டிருந்தமை காரணமாக அதற்குச் சமமான அளவில் ஆண்டின் பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் வைத்தியசாலையிலிருந்து சேவையை விட்டு விலகிச்சென்ற மற்றும் ஓய்வுபெற்ற 11 உத்தியோகத்தர்களிற்காக செலுத்தப்படாதிருந்த பணிக்கொடைத் தொகை ரூபா 2,458,721 ஆனதுடன் அத்தொகை செலுத்த வேண்டிய பணிக்கொடைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 6 தொடக்கம் 26 வருடங்களிற்கு இடைப்பட்ட காலவீச்சில் பணியாற்றியிருந்த 07 பேர்களினது சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு 2011 ஆம் ஆண்டில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு மொத்தச் சேவைக்காலத்திற்காகவும் மீளாய்வாண்டில் பணிக்கொடைக் கொடுப்பனவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,357,488 ஆல் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறையும் அதற்குச் சமமான தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டது.

(எ) மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கமைய பொருளாதாரச் சேவைக் கட்டணம் ரூபா 8,522,683 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களின் படி அந்த செலவினம் ரூபா 8,642,497 எனக் காட்டப்பட்டமையால் பொருளாதாரச் சேவைக் கட்டணச் செலவு மற்றும் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 119,815 ஆல் குறைத்துக் காட்டப்பட்டன.

(ஏ) பெறுமதிசேர் வரி மீதான நிறுத்தி வைத்தல் வரியாக மிகையாகக் கழித்துக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 320,905 இனை திருத்துகையில் குறித்த வழங்குனரின் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக தொடர்புடைய செலவினக் கணக்கிற்கு செலவு வைத்திருந்தமை காரணமாக ஆண்டிற்கான செலவினமும் பற்றாக்குறையும் அதற்குச் சமமான தொகையால் குறைத்துக் காட்டப்பட்டன.

(ஒ) வைத்தியசாலைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 290,000 தொகையிலிருந்து மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய இரட்டைப் பதிவுகள் சரியாக

செய்யப்பட்டிருக்கையில் மீண்டும் நாட்குறிப்புப் பதிவின் ஊடாக நன்கொடைக் கணக்கிற்கு வரவு வைத்து இருப்புக்கள் கணக்கிற்கு செலவு வைத்திருந்தமை காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறையும் நன்கொடைப் பெறுமதியும் ரூபா 290,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டன.

(ஓ) ஆண்டிற்குரிய காலாவதியான இருப்பின் பெறுமதி ரூபா 2,067,450 ஆனதுடன் அதனை இருப்பழிவாக ஆண்டிற்கான இலாபத்திற்குப் பதிவழிக்காது முன்னைய ஆண்டின் காலாவதியான இருப்பு ஏற்பாட்டு மீதிக்கு சீராக்கி ரூபா 1,351,858 ஆன வேறுபாட்டினை மாத்திரம் ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கிற்கு மாற்றியிருந்தமை காரணமாக ரூபா 715,592 ஆல் ஆண்டின் பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உயர் கவனிப்பு நிலையக் கட்டிடத்தின் மூன்றாம் மாடியின் நிர்மாணப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டு பாவனைக்கு எடுத்தக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 28,010,153 தொகையினை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கிலிருந்து ஏனைய கட்டிடங்கள் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கிணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி மீதி | சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகள் / ஏடுகளின் படி மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| i. ஊழியர் இடர் கடன்கள் | 76,757,243 | 76,841,942 | 84,699 |
| ii. பெறப்பட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்கள் | 46,064,648 | 46,905,016 | 840,368 |

## 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் வாடகை வருமானம், மின்சாரக் கட்டணங்கள், கழிவகற்றல் கட்டணங்கள் மற்றும் வைத்தியசாலைக் கட்டணங்களாக 9 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலத்திற்குரிய ரூபா 130,332 இனையும் 1 இற்கும் 4 இற்றும் இடைப்பட்ட காலத்திலிருந்து பெறப்பட வேண்டியிருந்த ரூபா 7,248,583 இனையும் அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலை, சனாதிபதி நிதியம் மற்றும் சுகாதார அமைச்சிடமிருந்து 5 ஆண்டுகளிற்கும் மேலாக காலமாக பெறப்பட வேண்டியிருந்த ரூபா 1,117,561 மீளாய்வாண்டில் திரட்டிய இலாபத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வைத்தியசாலையின் பல்வேறு கடன்கொடுத்தோர்களிற்கும் பல்வேறு நிறுவனங்களிற்கும் 05 ஆண்டுகளிற்கும் மேலாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 178,144,248 ஆன 3 மீதிகளையும் 1 தொடக்கம் 5 ஆண்டுகளிற்கு இடையில் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 148,445,693 ஆன 02 மீதியினையும் தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு விடயங்களின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| i. | நானாவிதக் கடன்கொடுத்தோர் | 8,596,193 | மீதி உறுதிப்படுத்தல் |
| ii. | அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்கள் | 46,064,648 | மேற்படி |
| iii. | சுகாதார அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தாதிகள் பயிற்சி நிலையத்தின் கழிவகற்றல் கட்டணம் | 5,907,011 | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| iv. | நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசன சபைக்கு செலுத்தவேண்டிய தொகை | 26,045,734 | மேற்படி |
| v. | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு செலுத்த வேண்டிய தொகை | 323,116,494 | * ரூபா 10,446,000 இற்கான பட்டோலை |
| vi. | வியாபாரக் கடன்கொடுத்தோர் | 38,238,377 | * ரூபா 36,030,515 இற்கான மீதி உறுதிப்படுத்தல் |

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவை | |
| ix ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு | அலுவலக நேரத்திற்கு அப்பால் ஆற்றப்படுகின்ற அலுவலகம் சாராத வேலைகளிற்காக கிடைக்கின்ற கட்டணங்களிலிருந்து 10% இனை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மருத்துவர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 160,970,070 ஆன தொழில்சார் கட்டணங்களிலிருந்து 10% திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் | |
| i. நி.பி. 104(3) மற்றும் (4) | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த 2 விபத்துக்களிற்காக ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. நி.பி. 371 (2)(இ) | i. பதவிநிலை சாராத உத்தியோகத்தர்களிற்கு 78 சந்தர்ப்பங்களில் ரூபா 1,191,600 |

| | | |
|---|---|---|
| | | முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| | | ii. உப கட்டுநிதிகள், பெறப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 111,020 ஆகும். |
| | iii. நி.பி. 762 | இருப்பு மட்டங்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iv. நி.பி. 1645(அ) | வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் சம்பவக் குறிப்பேட்டில் உரிய பதிவுகள் எழுதப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| | v. நி.பி. 1647(அ) | நுகர்வுப் பொருட்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| | vi. நி.பி. 1647(உ) | வாகனப் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மருந்துகள் முகாமைத்துவக் கையேட்டின் 6 ஆம் அத்தியாயத்தின் 2 மற்றும் 7 ஆம் பிரிவு | மருந்தின் பெயர் மற்றும் விலைகளைக் கருத்திற்கொண்டு மருந்துகள் நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மருந்துகளின் வியாபாரப் பெயரினைக் கருத்திற் கொண்டு மருந்துகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் முதல் 6 மாத காலத்தில் நோயாளர்களினால் மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்த தொகை ரூபா 17,038,325 ஆகும். |
| (ஈ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈஉ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.8.2 ஆம் பிரிவு | திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது கொரிய மருத்துவப் பரிசோதனை நடவடிக்கைகளிற்காக வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற சேவை பெறுனர்களின் பரிசோதனை நடவடிக்கைகளிற்காக உத்தியோகத்தர்களிற்கு ரூபா 796,648 படி செலுத்தப்பட்டிருந்தது. |
| | 2006 ஜனவரி 25 ஆந் திகதிய NPA 8 | திணைக்கள கொள்வனவுகள் சபைக்கான |

| | | |
|---|---|---|
| (உ) | ஆம் இலக்க தேசிய கொள்வனவுகள் முகவர் நிலையத்தின் கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கையேட்டின் 2.8.4 ஆம் பிரிவு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு வரிசை அமைச்சின் அது தொடர்பில் அறிவுபடைத்த உத்தியோகத்தர் ஒருவரோ அல்லது நிறுவனத்திற்கு வெளியிலுள்ள நபரொருவரோ சம்பந்தப்பட வேண்டிய போதிலும் வைத்தியசாலையின் ரூபா 24,900,000 பெறுமதி கொண்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் 06 இயந்திரங்களைக் கொள்வனவு செய்கையில் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க மற்றும் 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் | உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்துவதற்கு உரித்தற்ற வைத்தியசாலை செயலாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளரிற்கு ரூபா 30,000 வீதம் மாதாந்த பிரயாணப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 360,000 மற்றும் ரூபா 210,000 என்ற வகையில் பிரயாணப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (எ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மாதாந்தம் ரூபா 60,000 வீதம் 08 மாதங்களிற்காக ரூபா 480,000 படியொன்று பணிப்பாளரிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு ஐயவினாவின் பின்னர் அப்படியினைச் செலுத்துவது நிறுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2009 யூலை 08 ஆந் திகதிய PED/PU ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு நடைமுறையினைத் தயாரித்து தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு 2009 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 2009 செப்தம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009 (2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | சமர்ப்பிக்கப்பட்டிருந்த படிவத்திற்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஓ) 2009 மே 29 ஆந் திகதிய 1-18/2009 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் பொதுச் சுற்றறிக்கை | ஒரு நாளைக்கு ஆகக்கூடியது 04 மணித்தியாலங்கள் மாத்திரம் வைத்தியர்களிற்கு அவசர அழைப்பு படியினை பெற்றுக் கொள்ள முடியுமாயிருப்பினும் அதற்கு முரணாக ஒரு நாளைக்கு 8 மணித்தியாலங்கள் வீதம் 2011 மே தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கு வைத்தியாலையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளரிற்கு முறையே ரூபா 172,800 மற்றும் ரூபா 122,400 வீதம் அவசர அழைப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வைத்தியசாலைச் சபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 27,895,776 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 52,064,779 ஆனமையால் நிதி விளைவுகள் ரூபா 79,960,555 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. மொத்த வருமானம் ரூபா 69 மில்லியனால் அதிகரித்திருக்க மொத்தப் பொருள் நுகர்வுச் செலவினம் ரூபா 64 மில்லியனாலும் பதவியணிக் கிரயம் ரூபா 71 மில்லியனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 42 மில்லியனாலும் அதிகரித்திருந்தமையே இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு மற்றும் நிதி நிலைமை முன்னைய ஆண்டுடன் பகுப்பாய்வு செய்து ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

/

| விடயம் | 2011 ஆம் ஆண்டின் பெறுமதி | 2010 ஆம் ஆண்டின் பெறுமதி | முரண் | முரணின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மருந்து களஞ்சிய இருப்பு | 19,132,142 | 8,045,406 | 11,086,736 | 137.8 |
| நானாவிதக் கடன்பட்டோர் | 8,596,193 | 12,307,317 | (3,711,124) | (30) |
| அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் | 46,064,648 | 28,710,327 | 17,354,321 | 60 |
| வங்கி நடைமுறைக் கணக்கு | 103,658,056 | 28,957,847 | 74,700,209 | 257.9 |
| செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 2,282,901 | 1,732,901 | 550,000 | 31.7 |
| **வருமானம்** | | | | |
| நானாவித வருமானம் | 4,936,696 | 7,096,923 | (2,160,227) | (30) |
| செனல் சேவை கட்டணம் | 1,261,635 | 2,254,077 | (992,442) | (44) |
| **செலவினம்** | | | | |
| மருந்துகளின் கொள்வனவு | 145,933,419 | 102,107,630 | 43,825,789 | 43 |
| மருந்து கட்டும் பொருட் கொள்வனவு | 29,953,779 | 44,421,981 | (14,468,202) | (32) |
| ஆய்வுகூட நுகர்வுப் பொருட் கொள்வனவு | 84,752,413 | 57,701,448 | 27,050,965 | 46.8 |
| எரிபொருள் கட்டணம் | 11,548,540 | 8,189,378 | 3,359,162 | 41 |
| திருத்த மற்றும் பேணுகை செலவினம் | 60,206,829 | 32,798,192 | 27,408,637 | 83.6 |

## 3.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| திரவத்தன்மை விகிதங்கள் | ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதாசாரம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 1:1.9 | 1:2.4 | 1:2.9 |
| விரைவு விகிதம் | 1:1 | 1:2.8 | 1:3.9 | 1:5 |

திரவத்தன்மை விகிதங்கள் வீழ்ச்சிப் பெறுமதிகளைக் கொண்டிருப்பதுடன் வைத்தியசாலையின் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு போதியளவு தொழிற்படு மூலதனமின்மை நிலை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பொது வைத்தியசாலைச் சபையின் செயலாற்றுகை தொடர்பிலான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| (அ) செயலாற்றல் அளவுகோல் | 2011 | 2010 | குறைவு | 2010 உடன் ஒப்பிடுகையில் 2011 இன் சதவீதம் % |
|---|---|---|---|---|
| i. நரம்பியல் சத்திரசிகிச்சை எண்ணிக்கை | 67 | 194 | 127 | 65.5 |
| ii. தொண்டை, காது, மூக்கு தொடர்பான சத்திரசிகிச்சை எண்ணிக்கை | 543 | 687 | 144 | 20.96 |
| iii. கண்சிகிச்சைப் பிரிவு | | | | |
| CCT பரிசோதனை எண்ணிக்கை | 16 | 52 | 36 | 69.23 |

| | | | | |
|---|---|---|---|---|
| Topagraphe பரிசோதனை எண்ணிக்கை | 59 | 107 | 48 | 44.85 |
| iv. பிரசவப் பிரிவு | | | | |
| Dopppler Scans பரிசோதனை | 214 | 562 | 348 | 61.92 |
| Ultrasound scanes | 2979 | 4613 | 1634 | 35.42 |
| v. Medical checkup - FEB | 4086 | 6659 | 2573 | 38.63 |

(ஆ) முன்னைய ஆண்டில் பணம் செலுத்தும் வார்ட்களில் கட்டில்களின் பயன்பாடு 61% ஆக காணப்பட்டதுடன் அது மீளாய்வாண்டில் 51.63% ஆக பின்னடைவைக் கணடிருந்தது.

(ஆ) கண் சிகிச்சை பிரிவின் vishual fields பரிசோதனை செய்யும் இயந்திரம் செயலிழந்து காணப்பட்டமையால் மீளாய்வாண்டில் எவ்விதப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) எக்ஸ் கதிர் பிரிவினால் செயலாற்றல் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் செயலாற்றல் மீதான மதிப்பாய்வினை மேற்கொள்ள முடியவில்லை.

(ஈ) நரம்பியல் மருத்துவ விஷேட பராமரிப்பு பிரிவு மீளாய்வாண்டில் 50 நாட்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 315 நாட்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. அதற்கமைய மீளாய்வாண்டில் நரம்பியல் மருத்துவ விஷேட பராமரிப்பு பிரிவு 86% பயன்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்களைத் திறந்ததன் பின்னர் 45 தொடக்கம் 88 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் கொள்வனவுச் சபைகள் கூடப்பட்டிருந்த 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) ரூபா 2,221,110 பெறுமதியான 4,500 Elastic Adhesive Bandage (10 cmx4.5cm) சுருள்களை கொள்வனவு செய்வதற்காக தரத்தில் உயர்ந்தவை எனக்

குறிப்பிட்டு இரண்டாவது குறைந்தபட்ச விலையினை சமர்ப்பித்திருந்த நிறுவனம் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையினால் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பொருட்கள் தரத்தில் குறைந்தவை என்பது பின்னர் கண்டுகொள்ளப்பட்டிருந்தது.

(இ) நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவிற்கான உபகரணத் தேவையினை நிவர்த்தி செய்யாமை ரூபா 15,750,000

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. ரூபா 12,437,668 பெறுமதியான உபகரணங்கள் மாத்திரம் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் அதற்குமேலும் உபகரணங்களிற்கான தேவைப்பாடு காணப்படுகையிலும் 21% சேமிப்பான ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. நரம்பியல் சத்திர சிகிச்சை உபகரணங்களிற்காக விலைமனுக் கோரலை மேற்கொண்ட பின்னர் பொருட்களை கட்டளையிடுவதற்காக நீண்டகால தாமதம் செய்யப்பட்டிருந்தமை காரணமாக வழங்குனர் உரிய காலத்தில் பொருட்களை விநியோகிப்பதற்கு தவறியிருந்தார்.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலையில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படாதிருக்கையில் மீளாய்வாண்டில் மருந்துகளின் நுகர்வு ரூபா 39,846,032 ஆல் அல்லது 42% ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) நோயாளர்களிற்கு மருந்துகளிற்கு சிட்டையிடுகையில் 10% மற்றும் 30% என்ற ரீதியில் இலாப எல்லையொன்று சேர்க்கப்படுவதுடன் மீளாய்வாண்டில் நுகரப்பட்ட மருந்துகளின் கொள்விலை ரூபா 137,297,459 ஆனதுடன் அதற்கு குறைந்த பட்சமான 10% இலாப எல்லையினை சேர்த்த பின்னர் ரூபா 151,027,205 வருமானம் கிடைத்திருத்தல் வேண்டும். இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் படி மருந்துகளிற்காக கிடைத்திருந்த வருமானம் ரூபா 132,137,313 ஆனமையால் ரூபா 18,889,892 ஆன வருமானப் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நோயாளர்களிற்கு வழங்கப்பட்ட மருந்துகளின் கொள்விலை ரூபா 137,297,459 ஆனதுடன் அவற்றை விற்பனை செய்தமையால் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா

132,137,313 ஆனமையால் மருந்துகளின் விற்பனையால் ரூபா 5,160,146 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

4.4 நிதியங்களின் குறைப்பயன்படுத்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வைத்தியசாலையின் மூலதனச் செலவுகளிற்காக ரூபா 346,000,000 ஏற்பாடொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 231,000,000 ( முன்னைய ஆண்டிற்கான ரூபா 20 மில்லியன் அடங்கலாக) கிடைத்திருந்தது. இத்தொகையிலிருந்து ஆண்டில் ரூபா 109,732,752 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய தொகையான ரூபா 121,267,248 மதிப்பிடப்பட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்திக் கொள்ளாது பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2005 ஆகஸ்ட் மாதத்தில் வைத்தியசாலையினால் ரூபா 10,000,000 பெறுமதியான ஏழு நாள் அழைப்பு வைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அது ஏழு நாள் வைப்பொன்றாகவே காணப்பட்டது. இந்த வைப்பு அனேகமாக குறுங்காலத்தில் பணத்தினை மீளெடுக்கும் நோக்கிலேயே செய்யப்படுகின்ற முதலீடானதுடன் இப்பணத்தினை நீண்டகால முதலீட்டில் ஈடுபடுத்தியிருப்பின் வைத்தியசாலைக்கு சாதகமான வட்டியொன்றை பெற்றுக்கொள்வதற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

4.5 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 05 களஞ்சியங்களில் ரூபா 12,230,497 பெறுமதியான இருப்புக்கள் வருடம் முழுவதும் பாவனைக்கு எடுக்கப்படாது பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2011 ஆகஸ்ட் மாதத்தில் புதிய சக்கர வண்டியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதனைக் கொள்வனவு செய்த பின்னர் தொடர்ச்சியாக புதிய இயந்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 3.6 மில்லியனிற்கு மேல் செலவு செய்து திருத்தப்பட்டிருந்த 2 பழைய சக்கர இயந்திரங்களும் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியிலேயே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. தற்போது திருத்தப்பட்டிருந்த 2 பழைய சக்கர இயந்திரங்களும் பயன்படுத்தாது வைக்கப்பட்டடிருந்தன.

## 4.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையின் தீர்மானத்திற்கமைய குறைந்தபட்ச விலையின் கீழ் மருந்துகள் கொள்வனவு செய்யப்படாது உயர் விலைகளின் கீழ் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மருந்துகளிற்காக நோயாளர்களிடமிருந்து குறைந்த விலைகளை அறவிட்டிருந்ததன் காரணமாக 3 மருந்துகளிலிருந்து வைத்தியசாலைக்கு ஏற்பட்டிருந்த இழப்பு ரூபா 4,491,800 ஆகும்.

(ஆ) சக்கர இயந்திரத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 150,000 ஆன போதிலும் வழங்குனருக்கு அதனை ரூபா 80,000 இற்கு வழங்கியமையால் ரூபா 70,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.7 ஒப்பந்த கட்டுப்பாட்டு நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | ஒப்பந்தம் தொடர்பான விபரங்கள் | தொகை | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | (i) | 2,200 Eye Dropes அலகுகளைக் கொள்வனவு செய்தல். (சத்திரசிகிச்சை திரவம்) | 869,000 | கேள்வி நிபந்தனைகள் 6 இன் படி கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களிற்குள் கட்டளைப் பெறுமதியின் 10% செயலாற்றல் பிணை முறியொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | Gauze Absorbant (cotton) 36x100 yards (கட்டும் பொருட்கள்) | 6,837,000 | |
| (ஆ) | | நானாவித மருந்துகளின் கொள்வனவு | 19,055,924 | |
| (இ) | | புதிய வாகனத் தரிப்பிடத்திற்காக இலத்திரணியல் | 1,778,734 | i. கேள்வியினைக் கையளிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த வழங்குனருடன் உடன்படிக்கை |

| | |
|---|---|
| கட்டுப்பாட்டு முறைமையொன்றை கொள்வனவு செய்து பராமரிப்புச் சேவைகளை மேற்கொள்ளல் | யொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. |
| | ii. கொள்வனவுகள் வழிகாட்டல் கையேட்டின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 5% இற்கு குறையாத செயலாற்றல் பிணை முறியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | iii. சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை நிபந்தனைகளின் படி கட்டுப்பாட்டு முறைமையின் வன்பாகப் பெறுமதியான ரூபா 325,000 இல் 30% ஆகிய ரூபா 97,500 வருடாந்த வன்பாக சேவைக் கட்டணம் தொடர்பில் (கிரயத்தில் ஏறத்தாழ 1/3 இற்கு கிட்டிய பெறுமதிகொண்ட) குறித்த கொள்வனவினை மேற்கொள்கையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையின் கவனம் திரும்பியிருக்கவில்லை. |
| | iv. சேவை உடன்படிக்கையின் படி, ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் குறித்த சேவை செய்யப்பட வேண்டுமாயினும் சேவை உடன்படிக்கைக்குரிய 06 மாத காலம் கடந்த பின்னரே சேவை உடன்படிக்கையில் கைகச்சாத்திட்டிருந்தமை. |
| | v. சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை நிபந்தனைகளின் படி மென்பாகத்திற்காக வருடாந்த சேவைக் கட்டணமொன்று அறவிடப்படும் எனக் குறிப்பிடப்படாதிருக்கையில் மென்பாகத்திற்காகவும் அதன் பெறுமதியில் 20% பேணுகை உடன்படிக்கையில் கைச்சாதிடப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு தொடர்பில் 2010 இன் 06 மாத காலம் கடந்த பின்னர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்காமை காரணமாக காலாண்டுக்கொரு தடவை சேவை செய்தலின் இரண்டு சேவை முறைகள் தவறவிடப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உடைந்து விழுந்திருந்த எல்லை மதிற்சுவரின் ஒரு பகுதியை நிர்மாணித்தல் | 241,395 | சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் செய்யப்பட்ட வேலைகள் மீதான அறிக்கை இல்லாமை. |
| (உ) | கழிவுப் பொருட்கள் களஞ்சிய நிர்மாணம் | 982,918 | i. மேலதிக வேலைகளிற்காக ரூபா 468,242 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் செய்யப்பட்ட வேலை அறிக்கைகளோ அல்லது பொறியியலாளரினதோ தொழில்நுட்ப உத்தியோகத்தரினதோ அறிக்கை இல்லாமை<br>ii. பணி நிறைவேற்றப்பட்டு 2 மாதங்கள் கடந்த பின்னரே மேலதிக வேலைகளிற்காக கொள்வனவுச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தமை. |
| (ஊ) | காற்றுச் சீராக்கி முறைமையின் இரண்டு விலர் இயந்திரங்களை திருத்துதல் | 3,692,886 | i. 24,000 கிலோமீற்றர் ஓட்ட மணித்தியால ங்களின் பின்னர் செய்யப்பட வேண்டிய திருத்தமொன்றாக திருத்தங்கள் மதிப்பீடொன்று 2008 ஒக்டோபரில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும் திருத்த வேலைகள் ஒப்பந்தத்தினை கையளித்தல் 2010 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது<br>ii. குறித்த திருத்தம் அத்தியாவசியத் தேவையாகுமா என்பது தொடர்பில் இலங்கை மின்சாரச் சபையின் பரிந்துரை கோரப்பட்டிருந்த போதிலும் சேவை வழங்கும் நிறுவனத்துடன் இணைந்து ஒன்றாக அவர்களது பரிந்துரை வழங்கப்பட்டிருந்தமையால் பரிந்துரையின் சுதந்திரத் தன்மை குறித்து உறுதியாகவில்லை.<br>iii. கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 8.9.1 ஆம் பிரிவின் படி வைத்தியசாலை யினால் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.<br>iv. அந்த கையேட்டின் 5.4.4.(1) ஆம் பிரிவின் படி ஒப்பந்தங்களிற்காக வேலை முற்பணமாக உச்ச அளவாக 20% மாத்திரம் செலுத்தப்பட முடியுமான |

போதிலும் மொத்த ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 3,692,886 தொகையும் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

v. அந்த கையேட்டின் 5.4.6(அ) ஆம் பிரிவின் படி ஒப்பந்தகாரரிற்கு செலுத்தப்பட வேண்டிய சகல செலுத்துதல்களிலிருந்தும் குறித்ததோர் தொகையினை பிடித்து வைக்க வேண்டுமாயினும் இந்த ஒப்பந்தம் தொடர்பில் பிடித்து வைத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

vi. ரூபா 2 மில்லியன் செலவில் குறைபாடுடைய 02 கண்டென்ஸர் கொயில்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன் பின்னர் அவைகள் அவ்வாறிருக்கையில் ஏனைய 02 கண்டென்ஸர்கள் பொறுத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக அதிக செலவினமொன்றை செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

vii. அவ்வாறே மேலதிக இரண்டு கண்டன்ஸர்களையும் நிறுவனத்தில் பொறுத்துவதற்காக 2 ½ மாதத்திற்கு மேல் செல்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒரு மாதத்தினுள் மேலதிக கன்டஸடர்கள் பொறுத்தப்பட்டிருந்தமையால் அவைகள் உண்மையாகவே இறக்குமதி செய்யப்பட்ட புதியவையா என்பது குறித்து கணக்காய்வில் உறுதியாகவில்லை.

viii. திருத்தங்களிற்கான மதிப்பீட்டின் படி அதற்காக ஏறத்தாழ 16 நாட்கள் போதுமாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறித்த திருத்தத்திற்காக 08 மாதங்களிற்கு மேற்பட்ட காலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

ix. திருத்த வேலைகள் தோல்வியடைந்தமையால் முற்பண பிணை முறியினை காசாக் குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித் திருக்கையில் அதனைக் கருத்திற் கொள்ளாது பிணைமுறி விடுவிக்கப் பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (எ) | உயர் பராமரிப்பு நிலையக் கட்டிட காற்றுச் சீராக்கி முறைமையின் நீர்க்கசிவினை திருத்துதல் | 791,178 | i. வைத்தியசாலையின் பொறியியலாளரினால் திருத்த வேலைக்கான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் சேவை வழங்கும் நிறுவனத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் அந்த நிறுவனத்திற்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.<br>ii. சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் அல்லது சிட்டைகளில் திருத்தங்களிற்காக விநியோகிக்கப்பட்டு பொருத்தப்படவுள்ள பொருட்கள் மற்றும் அவற்றிற்காக அறவிடப்படுகின்ற தொழிலாளர் கட்டணங்கள் மற்றும் கூலிகள் தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.<br>iii. பயன்படுத்தப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 100,000 இற்கும் குறைவான போதிலும் திருத்த வேலைச் செலவினம் ரூபா 791,178 ஆகக் காணப்பட்டது. |

## 4.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வைத்தியசாலையின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கைக்கும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கைக்கும் இடையே பின்வருமாறு பற்றாக்குறைகளும் மிகைகளும் அவதானிக்கப்பட்டன.

| பதவிகள் | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட/மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|
| தாதிகள் பதவியணி | 528 | 529 | 1 |
| மாணவ தாதியர் பதவியணி | 300 | 102 | (198) |
| நிரந்தரத் தொழிலாளர் | 25 | 20 | (5) |
| சமயாசமய தொழிலாளர் | - | 11 | 11 |
| மருந்தகர் | 20 | 17 | (3) |
| மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் | 38 | 35 | (3) |

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் எதனையும் பூர்த்தி செய்யாத பெண் வைத்தியர் ஒருவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

(ஆ) வைத்தியசாலைக்குச் சொந்தமான உபகரணங்களை வெளியே எடுத்துச் செல்வதற்காக தவறான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு பொறியியலாளர் அத்தவறினை ஏற்றுக் கொண்டிருந்தமையால் தண்டனையுடன் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.

### 4.9 வாகனப் பயன்பாடு

கார் ஒன்று 2008-2009 மற்றும் 2010 ஆகிய 3 வருடங்களிலும் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மூன்று ஆண்டுகளில் ரூபா 127,667 திருத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் இந்தக் கார் 791 கி.மீ. மாத்திரம் ஓடியிருந்ததுடன் அதற்காக திருத்த வேலைகள் மற்றும் சேவைகள் மற்றும் எரிபொருளிற்காக ரூபா 152,148 செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி மீளாய்வாண்டில் இந்த காரிற்காக கி.மீ. 1 இற்கான கிரயம் ரூபா 192 ஆகும்.

### 4.9.1 வெளியாரிற்கு சொந்தமான வாகனங்கள்

வைத்தியசாலையின் பணிகளிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள சுகாதார அமைச்சிற்கு சொந்தமான காரையும் எம்புயூலன்ஸ் வாகனத்தினையும் அமைச்சிற்கு கையளிப்பதற்கோ அல்லது வைத்தியசாலைக்கு சுவீகரித்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்காமை

2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வைத்தியசாலையின் நிதிக்கூற்றுக்கள் 02 மாத தாமதத்தின் பின்னர் 2012 மே 04 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குரித்தான செயற்பாடு களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவிற்காக உபகரணங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஒரு மாதத்திற்குள் நிறைவுறுத்தப்படுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கேள்வி திறக்கப்பட்ட தினத்திலிருந்து பொருள் பெறுவனவு பூரணப்படுத்தப்படும் வரை ஒரு வருட காலம் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5) (ஊ) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அரையாண்டு அறிக்கைகளில் முதலாம் அரையாண்டிற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இரண்டாம் அரையாண்டு அறிக்கை 04 மாத தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சபைகள்

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ 55 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தது 03 மாதங்களிற்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டுமாயினும் 2011 ஆம் ஆண்டில் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை..

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களிற்கிடையே 15 விடயங்கள் தொடர்பில் 26% இலிருந்து 525% வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆண்டின் இறுதியில் மூலதனப் பெறுவனவுகளின் சேமிப்பு ரூபா 121,267,248 ஆன போதிலும் காசுப்புத்தகத்தின் படி மீதி ரூபா 103,658,056 ஆகும். மூலதன மானியமாக கிடைத்திருந்த ரூபா 17,609,192 மீண்டெழும் செலவிற்காக செலவிடப்பட்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது வைத்தியசாலையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஆ) சத்திரசிகிச்சை மற்றும் கட்டும் பொருட்களின் விநியோகம்

(இ) மருந்துகளை கட்டளையிடல்

(ஈ) கொள்வனவு நடைமுறை

(உ) முற்பணங்களின் செலுத்துகை மற்றும் பதிவு செய்தல்

(ஊ) வாகனங்களின் நிர்வாகம் மற்றும் பதிவேடுகளின் பேணுகை

(எ) கணக்கீடு

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# பத்தாண்டுப் பொழிப்பு

| திசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 | 2004 | 2003 | 2002 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா '000) | | | | | | | | | | |
| மொத்த விற்பனை வரவு (மருத்துவமனைக் கட்டணம்) | 828,236 | 812,121 | 721,761 | 588,214 | 521,147 | 480,290 | 411.959 | 395,886 | 366,516 | 326,456 |
| அரசாங்க மானியம் மீள்வரும் | 837,000 | 775,000 | 775,000 | 736,400 | 672,277 | 588,000 | 510,000 | 350,000 | 266,000 | 307,700 |
| வட்டி வருமானம் | 4,443 | 3,334 | 4,823 | 4,933 | 4,995 | 4,866 | 5,399 | 6,916 | 7,960 | 14,033 |
| ஏனைய வருமானம் | 24,032 | 32,909 | 27,099 | 17,339 | 14,742 | 15483 | 12,116 | 9,465 | 8,470 | 10,583 |
| மொத்த வருமானம் | 1,693,711 | 1,623,364 | 1,528,683 | 1,346,886 | 1,213,161 | 1,088,640 | 939,474 | 762,267 | 730,935 | 733,468 |
| மொத்தச் செலவு | 1,721,606 | 1,571,299 | 1,555,528 | 1,438,597 | 1,398,270 | 1,167,885 | 1,129,901 | 935,184 | 857,524 | 847,019 |
| மிகை அல்லது (பற்றாக்குறை) | (27,895) | 52,065 | (26,845) | (91,711) | (78,210) | (79,245) | (190,427) | (172,917) | (126,589) | (113,551) |
| அரசாங்க மானியம்- மூலதனம் | 236,785 | 115,000 | 102,925 | 106,100 | 130,591 | 105,000 | 46,141 | 145,863 | 98,614 | 118,230 |
| சொத்துக்கள் ('000) | | | | | | | | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 804,318 | 803,638 | 837,896 | 807,591 | 803,619 | 786,394 | 792,681, | 758,906 | 738,227 | 677,396 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 415,107 | 326,853 | 273,371 | 256,401 | 250,713 | 254,052 | 291,259 | 316,434 | 257,147 | 357,914 |
| ஒப்புரவும் பொறுப்புக்களும் | 415,107 | 326,853 | 273,371 | | | | | | | |
| மூலதனமும் ஒதுக்கீடும் | | | | | | | | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | 432,133 | 358,034 | 304,386 | 333,553 | 416,122 | 474,087 | 557,656 | 725,122 | 756,692 | 897,824 |
| புள்ளிவிபரங்கள் | 787,293 | 772,459 | 806,883 | | | | | | | |
| பயன்படுத்திய கட்டில்கள் (எண்) | | | | | | | | | | |
| அனுமதிக்கப்படடநோயாளர் (எண்.) | 1,047 | 1,046 | 1,043 | 1,013 | 1,011 | 1,006 | 1,000 | 1,012 | 984 | 984 |
| விடுவிக்கப்பட்ட நோயாளர்கள் (எண்) | 52,554 | 53,962 | 55,142 | 53,952 | 52,203 | 56,996 | 53,420 | 56,803 | 51,577 | 58,867 |
| தினசரி சராசரி அனுமதிப்பு (எண்.) | 52,761 | 53,931 | 55,319 | 53,967 | 52,331 | 56,380 | 51,448 | 56,822 | 51,618 | 58,886 |
| தினசரி சராசரி விடுவிப்பு (எண்) | 144 | 148 | 151 | 148 | 143 | 167 | 141 | 155 | 141 | 161 |
| தினரசி சராசரி பிணி (எண்) | 145 | 146 | 152 | 148 | 143 | 163 | 141 | 155 | 141 | 153 |
| தங்கியிருக்கும் சராசரி காலம் (நாள்) | 693 | 670 | 780 | 741 | 704 | 726 | 605 | 630 | 578 | 639 |
| படுக்கை இருப்பாட்சி % | 4 | 4 | 5 | 5 | 4 | 5 | 5 | 5 | 5 | 5 |
| நடைபெற்ற பிணி ஆய்வுகூடங்கள் (எண்) | 67 % | 66 % | 75 % | 73 % | 70 % | 72 % | 74 % | 63 % | 59 % | 65 % |
| முதல் முறை வருகை (எண்) | 2,851 | 2,822 | 2,782 | 2,515 | 2,478 | 2,170 | 2,117 | 2,183 | 2,202 | 2,144 |
| அடுத்துறு வருகை (எண்) | 25,722 | 26,312 | 26,961 | 24,825 | 26,604 | 27,113 | 27,066 | 27,251 | 27,673 | 29,447 |
| அவசர சிகிச்சைக் கூறு வருகை (எண்) | 121,567 | 123,611 | 126,630 | 123,165 | 124,810 | 136,138 | 133,178 | 128,133 | 129,312 | 135,708 |
| மொத்த வெளி நோயாளர் வருகை (எண்) | 36,898 | 38,012 | 40,452 | 38,005 | 34,695 | 30,026 | 32,709 | 38,672 | 32,664 | 59,106 |
| பிணி ஆய்வுகூடம் ஒன்றுக்கு சராசரி நோயாளர் (எண்) | 16,433 | 15,536 | 16,222 | 16,895 | 18,722 | 17,554 | 15,827 | 211,694 | 206,502 | 224,216 |
| | 52 | 53 | 55 | 59 | 62 | 76 | 76 | 76 | 71 | 77 |